தென்மொழி

தமிழீழப் பெண்கள் எழுச்சிப் பண்!

நீண்ட காலம் பூண்ட அடிமையும்,
நெடிய காலம் இழந்த உரிமையும்,
மாண்டு மடிந்த இருளொடு மாய்ந்தன!
மங்கையரே! ஒன்று திரண்டெழு வீரே!
மலர்ந்தது மலர்ந்தது தமிழீழம் என்றே!

எதிரிகள் படைகளும் தூள்தூள் ஆயின;
எம்முடை அண்ணனும் தம்பியும் சாய்ந்தனர்!
கதிரவன் முளைத்தது சிவந்த வானிலே;
கன்னியரே! ஒன்று சேர்ந்தெழு வீரே!
காத்த வீரரைக் கைதொழு வீரே!

ஆண்டான் அடிமை வேற்றுமை ஒழிந்தது;
ஆண்பெண் சமமென முரசும் ஒலித்தது;
வேண்டிய விடுதலைப் பண்ணும் இசைத்தது;
வீரப் பெண்டிரே இணைந்தெழு வீரே!
விடிவை நோக்கிப் புறப்படு வீரே!

சிவப்பு நிலத்தினில் பசுமை செழித்தது!
சிந்திய குருதியால் உரிமை கொழித்தது!
தவப்பு தல்வரின் உயிர்களும் சிரித்தன!
தங்கை தமக்கையர் கற்பும் எரித்தது!
தாய்க்குலத் தீர்!வந்து கூடிடு வீரே!

இழந்த உரிமைகள் மீண்டன இங்கே!
எல்லா நலன்களும் பெற,ஊது சங்கே!
பழந்தமிழ் ஈழம் சமைத்திடு வோமே!
பாரினுள் நாமும் உயர்ந்திடு வோமே!
பாங்கிய ரே!அணி திரண்டெழு வீரே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை உருபா 1-75

சுவடி : 23
ஓலை : 3

நமக்கு வந்த மடல்கள்.

O: 1200: பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்கட்கு, வணக்கம். எனது வருத்தத்தைத் தெரிவிக்கலாமா என்று எண்ணிய போது, பேரறிவுடைய தாங்களே அதை உணராமல் இருந்து விட்டபிறகு, நாம் சொல்லியா மாற்றிக் கொள்ளப் போகிறீர்கள் என்று இருந்து விட்டேன். எனினும் மேலும் மேலும் கசப்பு வளர்ந்து கொண்டே போவதால் இது குறித்து எழுத விழைகிறேன்.

அஃதாவது, 'பாவலரேறும் கலந்து கொண்டார்' (ஐரோப்பிய செலவைக் கூறுகிறார் போலும். —ஆ-ர்.) என்று விடுதலையில் செய்தி வெளியிட்டதால் கோபம் கொண்டீர்கள். இப்படிச் செய்யலாமா என்று கடிந்துரைத்தாலே போதுமானது. அதை விடுத்து எதிரிகள் கூறும் அருவருப்புக் குற்றச்சாட்டுகளை எடுத்துப் போட்டு நன்றி கூறினீர்கள். அத்தோடும் உங்கள் சீற்றம் தணியாமல் வீரமணி சின்னப்பயல் என்று எழுதிக் காட்டினீர்கள். தருமபுரி மாநாட்டில், "ஒரு தலைவனுக்குரிய 10 குணங்களையும் ஒருசேரப் பெற்றவர் வீரமணி" என்று தலைமையுரையில் கூறியதைத் தங்களைப் போன்றே நாட்டிலுள்ள அனைவரும் மறந்து விடுவார்கள் என்று கருதினீர்களா? அதற்கு மேலும் முடி வைத்தாற்போல் கழகத்திலிருந்து விலக்கப்பட்ட ஒருவருக்குக் கை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். (இதைச் சரி என்றோ தவறு என்றோ சொல்ல விரும்பவில்லை. எடுத்துக் காட்டிற்குக் கூறினேன்.)

இத்தனைக்குப் பிறகும் ஆசிரியரின் அணுகுமுறை எவ்வாறுள்ளது என்பதை நான் சொல்லி நீங்கள் உணர வேண்டியதில்லை. தமிழகத்தின் ஒட்டு மொத்தச் சிக்கலின்போது, இன எதிரியைச் சந்திக்கும்போது ஆத்திகம், நாத்திகம், மாற்றுக் கட்சிக்காரர், மாற்றுக் கருத்துடையவர் என்பதையெல்லாம் தாண்டி எவ்வாறு ஒருமுகப் படுத்துகிறார் என்பதெல்லாம் மாற்றாரும் வியந்து போற்றற்குரியது.

தாங்கள் ஓரிறைப் பற்றாளராக இருந்தாலும் அதே அணுகுமுறையில் 82 திருச்சியில் வலம் வந்த காட்சி எங்களால் மறக்க முடியாது. அதேபோன்று "உண்மை"யில் தங்கள் செவ்வி (நேருரை) வந்தது. மீண்டும் அந்த நிலை வரவேண்டும் என்பதே என் விழைவு. அதுமட்டுமன்று; தங்களுக்கு ஒரு கண்; கழகத்திற்கு ஒரு கண் எனப் பணியாற்றிடும் ஓவியர் அறவாழியைப் போன்ற ஆயிரமாயிரம் தொண்டர்களின் விழைவும் அஃதே!

தங்களன்புள்ள, —கு. தெய்வசிகாமணி, ஈரோடு-8.

O: 1201: அய்யா அவர்களே வணக்கம். இன்று நம் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்காகவும், தமிழ் இனத்தவருக்காகவும் மிகவும் பல தொல்லைகளுக்கிடையில் தொண்டாற்ற வேண்டிய நிலையை எண்ணும் பொழுது வெட்க வேண்டிய நிலைதான். அதிலும் தமிழனாலேயே தமிழனுக்குத் தொல்லை. இதற்கெல்லாம் ஒரே ஒரு கரணியத்தைதான் உறுதியாக என்னால் கூற முடிகிறது.

இம்மாதச் சிறப்பு மடல்!

எதை எண்ணி, எக் காலத்தை நோக்கி காத்துக் கிடக்கிறார்கள்!

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஐயா, வணக்கங்கள். தாங்கள் கடந்த 20—2—'87-ஆம் பக்கல் அரியலூர் கலைக் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்கும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இன்றையக் குமுக அமைப்பையும், அதில் மாணவப் பருவத்தின் சீரழிவுகளையும் மிகவும் அழுத்தமாகவும், உள வருத்தத் தோடும் படம் பிடித்துக் காட்டினாற் போல் விளக்கினீர்கள்.

உண்மையில் என்போன்ற இளைஞர்கள் பலருக்கும், அது மிகவாக ஈர்க்கக் கூடியதாகவும், இன்றைக்குப் பொது உணர்வற்ற-சீரழிந்து கொண்டிருக்கிற இளைஞர்களுக்கு ஒரு சிந்தனை மாற்றத்தையும் உறுதியாக அஃது அளித்திருக்கும். நிற்க.

தென்மொழி அன்பர்களும், உ.த.மு.க. தொண்டர்களும் உண்மையில் மக்கள் பற்றும், இக் குமுக முன்னேற்றத்திற்கான அங்காப்பும் மிகவும் குறைவுடையவர்களாக இருப்பதாகவே இன்றைய அளவில் நான் எண்ணுகிறேன்.

உண்மையான நம் இதழின், இயக்கத்தின் செயல்பாட்டு மெலிவுகளை நன்கு உணர்ந்திருக்கிற நம் அன்பர்கள், எதை எண்ணித்தான், எந்தக் காலத்தை எதிர்பார்த்துத்தான் இன்னும் காத்துக் கொண்டு கிடக்கிறார்களோ தெரியவில்லை.

நம் இயக்கம், இதழ்களின் மெலிவுகள் வலிவாக, ஆழமாக மேலும் எழுதப்பெற வேண்டும் என்று நமக்குள் பலருக்கு எண்ணம் இருப்பினும், அவ் வியக்கத்துள் அடங்கியிருக்கிற நாம் அவ் வலிவுக்கு, ஆழ்த்திற்கு என்ன பங்களிப்புச் செய்தோம் என ஒருவரும் எண்ணினார் அல்லர்.

அதைவிடுத்து இன்றைக்கு அரசியல் புனுகு பூசிக் கொண்டு சீழ் பிடித்துத் திரிகின்ற ஒப்போலைக் கட்சிகளுக்கு வால் பிடித்துக் கொண்டு, அத் தலைவர்களை விட்டால் இத் தமிழினத்திற்கு வேறு 'வகை'யில்லை என்று பிதற்றித் திரிவது உண்மையில் நம் நெஞ்சாங்குலையில் ஈட்டி பாய்ச்சுவது போன்றிருக்கிறது.

இச் சிந்தனையின் பின்னணியில், இருக்கின்ற இச் சூழலை விளங்கிக் கொண்டு, தென்மொழி அன்பர்களுக்கும், உ.த.மு.க. தொண்டர்களுக்கும், தமிழ் மக்கள் நலம் நாடும் பிற அன்பர்களுக்கும் நான் ஒன்றே ஒன்றை வலுவாகக் கூற விரும்புகிறேன்.

எந்த ஒரு விடுதலை இயக்கமும், மக்கள் ஆற்றல் இன்றி வெற்றி கொள்ளாது.

அவ் வகையில் மக்கள் ஆற்றலைப் புரட்சி செய்ய விரும்புவோர் வளர்த்தெடுத்தல் வேண்டும்.

அஃதாவது மக்களுக்கு நம் அடிமை நிலைகளை விளக்கி, அவர்களை அணி சேர்க்க வேண்டும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் நாம் இருக்கின்ற பகுதி

யில் நம் உணர்வொத்தவர்களை இணைத்து, மாதம் ஒரு பொதுக் கூட்டம், ஒரு கலை நிகழ்ச்சி எனச் செய்து நம் ஊர் அளவில் இதுபோலும் சிந்தனை உள்ளோரைப் பெருக்குவோம்.

அந்த அளவிலான தொகை பெருமளவில் ஒவ்வோர் ஊரிலும் சேருமானாலேயே, நம் இலக்கை அடைய ஒளி கண்டு விட்டதாக எண்ணலாம்.

'இன்றைக்கே எழாமல்
என்றைக்கு தான் எழுவோம்,
எண்ணிப் பார்ப்போம்.
என்றைக்குக் காலமினி
ஏற்றபடி கனிந்துவரும்
இந்நாள் போல.'

—விடுதலைவேட்பன், திருச்சி.

தென்மொழி வெளியீட்டு உரிமை அறிக்கை!

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19-ஆ. ஆ. (வருப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம் : சென்னை
2. காலமுறை : மாதம் ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர் : திருவாட்டி. மா. தாமரை
இனம் : தமிழர்
முகவரி : தென்மொழி அச்சகம் சென்னை-5
4. வெளியிடுவோர் பெயர் : திரு. பெருஞ்சித்திரனார்
இனம் : தமிழர்
முகவரி : தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெயர் : திரு. பெருஞ்சித்திரனார்
முகவரி : சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவர்களும் | திரு. பெருஞ்சித்திரனார் சென்னை-5.

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

-3-'87 } சென்னை-5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

தாய்நாடு மீட்க அணிதிரள்வீர்

—பாவலர். வள்ளிகேள்வன்.

அஞ்சாமை உண்மை ஒளியாமை ஆன்ற கடமையிற்கண்
துஞ்சாமை மெய்ம்மைத் துறவியர் போலத் தெளிவுடைமை
பஞ்சாக வேதுயர் தாம்படும் போதினும் பைந்தமிழ்க்கே
நெஞ்சே கொடுத்தநம் பாவலர் ஏற்றின் நிழல்இனிதே.

அணியா தவர்,தம்மை யேவியந் தேதான்; அடிபிடித்துப்
பணியா தவர்,வெற்றுச் சொல்வீரர் தம்மையே; பாரில்என்றும்
துணிவாக வே,சொற் பெருக்காற்றும் பாவலர் ஏறவரின்
பணியா தெனில்செந் தமிழினம் மீட்க உழைப்பதுவே.

மனத்தே அழுக்காறு வஞ்சம் எரிச்சல் மலிந்திருக்கும்
சினத்தோர்எஞ் ஞான்றும் தெளிவதும் உண்டோ?
திறல்முரசாய்
இனத்தோர் முழக்கி இருந்தமிழ் நாட்டினை மீட்கஅன்றே
கனிச்சா றளித்தார்நம் காவலர் பாவலர் ஏறு,நெஞ்சே!

தாய தமிழே துணையாய் எழுந்துஅடல் வேங்கையென்று
பாயும் நடைவீச்சுப் பாக்கள்தாம் ஆயிரம் போல்படைத்தே
தாயினம் மீட்கச் சிலிர்த்தெழுந் தார்பெருஞ் சித்திரனார்
ஆயிரம் ஆயிரம் செந்தமிழ் வீரர் அவர்படையே!

இருந்திப் படியேபொய் எட்டப்பர் காட்டும் கவர்ச்சிகண்டு
மருந்தென்று நஞ்சையே உண்டிங் குயிர்ச்சுடர் மாய்ப்பதுவோ?
சுரண்டும் வடவர் செருக்கை நறுக்கித்தாய் நாடுமீட்க
பெருஞ்சித் திரனார் அணியிலே சேர்கஎந் தாயினமே!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அசசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு;அமைச்சர்: கல்லை-அருட்செல்வன்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; தென்மொழி இரா. பாலகங்காதரன் (தொலைபேசி : 847829)

சுவடி 23] ௨0கஅ கும்பம் (பிப்-மார்-'87) [ஓலை 3

உட்பகை உற்ற குடி!

திருக்குறளை இக்காலத்தில் பலரும் பல கோணங்களில் பெருமைப் படுத்திக் கொண்டாடுவது, ஒரு புறத்து மனத்திற்கு மகிழ்ச்சியாக்வும் இன்னொரு புறத்துச் சிறிது வருத்தமாகவும் உள்ளதை மனம் விட்டுச் சொல்லியாக வேண்டிய நேரம் வந்து விட்டதாகவே நாம் கருதுகிறோம். ஆம்! திருக்குறளைக் கொண்டாடுவதிலும் வருத்தம் தோன்றுகிற சில செயல்கள் நடந்துதாம் வருகின்றன. அவை எவை?

திருக்குறளைத் தமிழர்கள் போற்றுவதில் வியப்பில்லை. அவர்கள் போற்றிக் கொள்ளாமல் இருப்பதுதான் வியப்புத் தருவது. அது மதங் கடந்த, சாதி கடந்த, மொழி கடந்த ஓரளவு இனமும் கடந்த நூலென்று சொல்லப் பெறுவதுடன், காலம் கடந்த நூலென்றும் கொண்டாடப் பெறுவதில் மிகுந்த கருத்து வேறுபாடு இருந்துவிட முடியாது. இவ்வுலகில் தோன்றிய உயிர்களால் கண்டு காட்டப் பெற்ற எந்த அறிவு நிலையாயினும், அது காலத்திற்கேற்ப இடத்திற்கேற்ப எந்த வகையானும் ஒருவகை மாற்றத்திற்குட்பட்டேயாதல் வேண்டும். இவ் வியங்கியல் நெறிக்கு எந்த அறிவாசிரியனோ அவன் படைத்த எந்த நூலுமோ விலக்கில்லை. எனவே திருக்குறளும் பலவகையான கருத்து வேறுபாடுகளுக்கு உட்படுவதும், சில கால, இடச் சூழ்நிலைகளில் கருத்து மாறுபாட்டுக்கே உட்படுவதும் கூட இயங்கியலுக்குப் பொருந்துவதே ஆகும்.

இந் நிலையில் திருக்குறளுக்கு உள்ள இயல்பான, அதற்கே உரிய திறப்பாடுகளை, அறிவுக் கூறுகளை, மெய்யறிவு வெளிப்பாடுகளை, இனி இவற்றுக் கெல்லாம் மேலாகவுள்ள சில தனித் தன்மைகளை விடவும், அதற்கு ஏதோ ஒரு புனிதத் தன்மை இருப்பது போலவும், இன்னும் சொன்னால் ஒரு தெய்வத் தன்மை இருப்பது போலவும் கற்பனையாகவும், மதவுணர்வோடும் சில போலித்தனமான கற்பிதங்களைச் செய்து கொண்டு, அதை ஒரு மதநூலாகவே கருதி, அதன் வாழ்வியல் கோட்பாடுகளை ஒரு சமயமாகவே செய்து வருகின்ற அடாத போக்கு, தமிழர்களை மேலும் அடிமை உணர்வுக்குள்ளும் அறியாமைச் சேற்றுக் குள்ளுமே ஆழ மூழ்க்குமேயன்றி, ஓர் உரிமை பெற்ற உண்மை அறிவு பெற்ற ஒரு சமவுணர்வுச் சமநிலைக் குமுகாயமாக மீட்டெடுக்க உதவாது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுகிறோம்.

திருக்குறளில் சமயம் இல்லை. வாழ்க்கைக்குப் புனிதம் கற்பிப்பது சமயம். வாழ்க்கைக்குப் பொருள் கற்பிப்பதே அறிவு. திருக்குறள் ஒரு சமய நூல் அன்று. அது முழுக்க முழுக்க ஒரு மாந்த வாழ்க்கைக்கு உரிய நூல். அதில் கூறப் பெற்றுள்ள கோட்பாடுகள், குறிக்கோள்கள், கொள்கைகள், நெறிமுறைகள் அனைத்தும் மாந்த வாழ்வியலுக்குரிய உண்மைகளே! மாந்த வாழ்வியலுக்கு அப்பால் நிகழ்வனவாகக் கற்பனையால் கூறப் பெறும் சில நிலைகள் திருக்குறளுள் கூறப் பெற்றிருந்தாலும், அவை, இவ்வுலகில் மாந்தன் உயிர் வாழ்க்கைக் காலத்தில் சிறந்து விளங்க வேண்டிய ஒரு தேவைக்காகவே கூறப் பெற்றன வாகவே கருதுதல் வேண்டும். உண்மையும் அதுதான். மற்றபடி திருக்குறள் காலத்திய—கற்பனைக் கொள்கைகளைப் பறை சாற்றும் பிற நூல்களில் உள்ளன போல், திருக்குறளில் வேற்றுலகச் செய்திகளாக எதுவும் கூறவோ வலியுறுத்தப் படவோ இல்லை என்பதை உணர்தல் வேண்டும். அதில் மெய்யறிவுக் கருத்துகளாக வலியுறுத்திக் கூறப்பெறும் கோட்பாடுகள் கூட, இவ்வுலக

மாந்த வாழ்வியலின் மலர்ச்சிக்காகவே கூறப் பெற்றனவாகும். இதை மேலும் விளக்கினுல் மிக நீளுமாகலின், இக் கருத்தை இத்துடன் நிறுத்திக் கொண்டு, இதன் அடிப்படையில் நாம் கூற வந்ததைப் பற்றிச் சிறிது கருதுவோம்.

திருக்குறளில் வாழ்வியல் கருத்துகள், மன நலப் பண்புகள், அறிவியல் கூறுகள் முதலியன கூறப் பெற்றிருப்பதெல்லாம், உலக மக்கட் குலத்திற்கே பொருந்துவன என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை தமிழினத்துக்காகவும் அவை சொல்லப் பெற்றன என்பதும், இனி இதனின்று இன்னும் ஒரு படி மேலே சென்று சொல்வதாஞல், அவை தமிழினத்துக்காகவே மட்டும் சொல்லப் பெற்றன என்பதும் அதற்கு மேலான உண்மையாகும். இனி, இதனை இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமாஞல், தமிழன் என்றும் தனக்காகச் சிந்தித்த வாழ்வியல், அறிவியல் கோட்பாடுகள், அறங்கள், நெறிமுறைகள் அனைத்தையும் உலக மாந்தர்க்கே பொருந்தும் அளவிலேயே சிந்தித்தான் என்பதே பேருண்மையாகும். இன்று இக் கருத்தை அடிமைப்பட்ட ஓரினத்தவர்களாக இருந்து சிந்திப்பவர்கள் விளங்கிக் கொள்வது கடினந்தான். இவ் வறிவு நிலைகளைப் பற்றியெல்லாம் விளக்கமாகக் கூற வேண்டிய ஒரு தேவைக்காகத்தான், நாம் திருக்குறள் மெய்ப்பொருளுரை என்று ஒரு நூல் எழுத வேண்டும் என்று கருதி அதனைக் கடந்த பத்தாண்டுகளுக்கு முன் தொடங்கி எழுதிக் கொண்டு வருகின்ருேமேயன்றி, நம் அறிவின் பரப்பையும் ஆழத்தையும் புலப்படுத்த வேண்டும் என்னும் பெருமைக்காக அன்று.

எனவே, திருக்குறள் ஒரு சமய நூலுமன்று; ஓர் அறநூல் என்ற அளவில் மட்டுமே எண்ணி வணங்குவதற்குரிய நூலுமன்று. ஆகவே ஒரு சமயத்தையோ அல்லது சமயம் போன்ற ஓர் இயக்கத்தையோ அதன்வழி உருவாக்க முனைவதும், திருவள்ளுவரை ஒரு தெய்வமாகக் கருதிக் கோயில் கட்டிக் கும்பிட வேண்டும் என்று விழைவதும் பழுத்த அறியாமையே ஆகும் என்பதை முதற்கண் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். (இவ் விடத்தில் ஓரின மக்கள் முன்னேற்றம் கருதி அவ்வக் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மக்கள் நலக் கருத்துகளைக் கூறிய புத்தரையும், தீர்த்தங்கரரையும் ஏசுவையும், முகமதுவையும், மக்கள் தெய்வங்களாகவே வழிபட்டு வருவதையும், அவ்வாறு திருக்குறளிலுங்கூடக் கூறப் பெற்றிருப்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.) அவ்வாறு நாம் சிந்தித்து உணர்ந்து கொள்வோமாஞல், திருக்குறளில் கூறப்பெறும் இனநலக் கருத்துகளை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். ஏனெனில், திருக்குறள் முழுக்க முழுக்க இந்தத் தமிழினம் எல்லா வகையானும் தன்னை ஈடேற்றிக் கொள்ள வேண்டும், நிலைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் எழுதப் பெற்ற ஓர் இனக் காப்பு நூலேயாகும். தமிழினம் அடிமைப் பட்டு

அழிந்து போகப் போவதினின்றும் கட்டிக் காப்பாற்ற எழுந்த ஒரு வரலாற்று எச்சரிக்கை நூலேயாகும். அதற்குப் பல நூற்றுக் கணக்கான சான்றுகள் திருக்குறளிலேயே புதைந்து கிடப்பதை, நுண்ணறிவுடையவர்கள் யாரும் பரக்கக் காண லாம். இந்த உண்மையைத்தான் நாம் ஆழ உணர்ந்து இன்று வரை பல நூற்றுக் கணக்கான கட்டுரைகளிலும், சொற் பொழிவுகள் வாயிலாகவும் உலகம் எங்கணும் உணர்த்தி வருகின் றேம். இங்கும் அதற்குரிய ஒரு கருத்தை அதன்வழி மெய்ப் படுத்திக் காட்டுவோம்.

திருக்குறளில் பொருட்பாலில், உட்பகை என்னும் ஓர் அதி காரம் உண்டு என்பது அனைவரும் அறிந்ததே! இவ் வதிகாரம், உறுப்பியலில் வருவது. அங்கவியல் என்று பரிமேலழகர் குறிப் பார். பொருட்பால் முழுவதும் அரசியல் கூறுகளையே உள்ளடக் கியதாகவே கூறப் பெற்றிருப்பினும், இந்த உட்பகை என்னும் அதிகாரத்தில் கூறப் பெறும் கருத்துகளுக்கும், அரசியலுக்கும் அத்துணைப் பொருத்தம் இருப்பதாக நாம் கருத முடியாது. உட்பகை என்னும் சொல், அரசனுக்குள்ள உட்பகைவர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாமேனும், இவ் வதிகாரக் கருத்துகளைப் பார்க்கும்பொழுது, அந்தக் கோட்பாட்டிற்கு, இவ் வதிகாரக் கருத்துகள் துணை செய்வனவாக யாரும் கூறிவிட முடியாது. மாறாக, இவை ஒரு குடி மக்களுக்குள் அஃதாவது ஓர் இனத்திற் குள், அதன் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் உட்பகை வர்கள், இரண்டகர்கள், மாற்றினத்திற்கு அடிமைப் பட்டுப்- போய்த் தன் இனத்தின் முன்னேற்றத்திற்குக் கேடாக நிற்கும் வஞ்சகர்களைப் பற்றி விளக்கமாகக் கூறும் கருத்துகளாகவே இருப்பதை, இவ் வதிகாரத்தை மேலோட்டமாகவன்றி, ஆழ மாகப் பார்ப்பவர்கள் நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

இப்படிப் பட்ட ஒரு குடியைத் திருவள்ளுவர் எங்குப் பார்த் தார்? எவருக்காகச் சொன்னர்? அல்லது சொல்லியிருக்க வேண்டும்? அமெரிக்காவிலோ, ஆத்திரேலியாவிலோ, அல்லது ஐரோப்பாவிலோ, ஆப்பிரிக்காவிலோ உள்ள குடிமக்களைப் பார்த்தா, இக் கருத்துகளை அவர் கூறியிருக்க முடியும்? இல்லை- யில்லை. திருவள்ளுவப் பேராசானுக்கு அக் கண்டங்கள் தெரிந் திருக்கவும் இல்லை; அங்குள்ள மக்கள் பிளவுபட்டு விளங்கியிருந்த தாகக் கண்டிருக்கவும் முடியாது. முழுக்க முழுக்க நம் தமிழ்க்- குடி மக்களையே நோக்கிக் கூறியனவாகும். அவர்கள் சேரன் ஆட்சியில் இருந்திருக்கலாம்; சோழன் ஆட்சியில் வாழ்ந்து கொண்டிருந்திருக்கலாம்; அல்லது பாண்டிய நாட்டில் இருந் திருக்கலாம். எப்படியும் அத்தமிழின மக்களிடம் உட்பகை தோன்றியிருந்து, அவர்களைப் பல்வேறு கூறுகள் உடையவர்க ளாகப் பிரித்திருக்கலாம். அவ்வாறு பிரிவு—பிளவு—பட்டதன்- வழி அவர்களுக்குள்ள ஒற்றுமை குறைந்து வலிவு மெலிவாகி, வாழ்வியல் முன்னேற்றங்கள் சீர்குலைந்திருக்கலாம்; அல்லது சீர்

குலையத் தொடங்கியிருக்கலாம். அந்த உட்பகை புறப்பகையின் ஊடுருவலால், அல்லது தூண்டுதலால் தோன்றியிருக்கலாம். எப்படியோ இவ்வாறான ஒரு விரும்பத்தகாத, அல்லது இயற்கைக்கு மாறான ஓர் இனத் தாக்கம் இத் தமிழினத்தில் திருவள்ளுவர் காலத்தில் தோன்றியிருக்கலாம்; அல்லது தோன்றி வளர்ந்து வந்திருக்கலாம். இந்த விளைவு நம் தமிழின வரலாற்றில் உறுதிப் படுத்தப் படுவதையும், நம் வரலாற்று நூல்களையும், இலக்கியங்களையும் ஒப்ப வைத்து ஆய்ந்து பார்க்கையில் நாம் உணர முடிகிறது. அப்பட்டமாக அக்கால் நேர்ந்த உண்மைகளைத் திருவள்ளுவப் பேராசான் கண்டு, உளம் நொந்து, உட்பகையின் சீர்கேடுகளை, அதன் இனத் தாக்கங்களை இவ் வதிகாரக் கருத்துகளாக இந்நூல்வழி நம் முன் புலப்படுத்துகிறார்.

இவ் வதிகாரத்தை நாம் முழுமையாகப் பார்த்தல் வேண்டும்; படித்தல் வேண்டும்; உணர்தலும் வேண்டும். இவ்வகையில் நாம் உணர்ந்த அனைத்தையும் இங்கு எடுத்துக் கூற இடமில்லாமற் போயினும், அதன் ஓரிரண்டு இன்றியமையாத கருத்துகளை மட்டும், இக்கால இனநலத் தேவை கருதி, இங்குக் கூறுவோம்.

உட்பகை சேர்ந்த ஒரு குடி எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதைப் பேராசான் நமக்குப் புலப்படுத்துகிறார். அந்தக் குடி வேறு எந்தக் குடியுமன்று; நம் தமிழ்க் குடிதான். அதுவும் திருவள்ளுவர் காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குடிதான்! அதில் ஒற்றுமையில்லையாம். அவ்வாறு ஒற்றுமையில்லாமல் உட்பகை செய்து கொண்டிருந்ததாம். எனவே உள்ளே பகை கொண்டு வெளிக்கு மட்டும் ஒற்றுமைபோல் தோற்றம் காட்டிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்ததாம். எப்படி?

> செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
> உட்பகை உற்ற குடி. —887.

"மண் குடுவைக்கும் அதன் மூடிக்கும் உள்ள ஒற்றுமை போல், அஃதாவது குடுவையும் மூடியும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதாகத் தோன்றினும், உண்மையில் அவை இணையாமல் பிரிந்திருப்பதைப் போல், உட்பகை கொண்ட குடிமக்கள் ஒற்றுமையாக இருப்பதில்லை" என்கிறார் நம் அருமைப் பேராசான்.

இந்த உவமையைக் காட்டி நம் தமிழின ஒற்றுமையைச் சாடுகிறார் அவ் வறிவுலக மேதை! நம் தமிழின மக்கள் இவ்வாறிருப்பது ஒருவரையொருவர் உட்பகைத்துக் கொண்டு, வெளியே தமிழினத்தவர் என்று கூறிக் கொள்ளும் போலித் தன்மையை மிகுவாகக் கடிகிறார் அவ் வறநெறிச் சான்றோர். இனி, அவர் கூறும் அடுத்த கருத்தையும் பாருங்கள்.

அஃதாவது, அவ்வாறு ஒற்றுமையில்லாத இவ் வினம் எவ்வாறு அழிந்து போகும் என்பதை இன்னோர் உவமையால் விளக்கும் அவரின் நெஞ்சப் பான்மையை, உள்ளத் துணுக்கை,

உணர்வுத் துடிப்பை, அறிவுக் கவலையை—எண்ணிப் பாருங்கள். அப்பொழுது அவர் மார்க்சை விட உயர்வாகத் தோன்றுவார்; எங்கெல்சை விட ஏற்றமாகத் தெரிவார்; இலெனினை விட இன நலப் புரட்சியாளராகத் தென்படுவார்; இவ் விருபதாம் நூற்றாண்டில் நம் இன நலம் காக்க வந்த தந்தை பெரியாருக்குத் தந்தையாக விளங்குவார்!

அரம்பொருத பொன்போலத் தேயும், உரம்பொருது
உட்பகை உற்ற குடி.

'இரும்பைத் தேய்க்கின்றது அரம். அந்த இரும்பு போன்ற உறுதியும் உரனும் மிக்க இந்தத் தமிழ்க் குடியைத் தேய்க்கின்றது—அஃது தேய்த்து அறுக்கத் தொடங்கியுள்ள நம்மிடையில் இருக்கும் உட்பகை. இவ் விரும்பு என்றேனும் ஒரு நாள் துகள் துகளாகச் சிதறிப் போவதைப் போல் இவ் வினமும் ஒருநாள் துண்டு துணுக்காகச் சிதறிப் போகுமே, ஐயோ' என்று கதறி யழுகிறார், நம் இனநலம் காக்க வந்த அறிவுப் பேராசான், திருவள்ளுவர்.

இரும்பாம் நம் தமிழினம்! உட்பகை போன்ற அரத்தால் தேய்த்தழிக்கப் படுகிறதாம் இது! அன்றே தொடங்கியது இதன் அழிவு! அக் காலத்தில்தான் அவர் இவ் வின அழிவை உணர்ந்தார்! அவரால் கதறியழுதிருக்க இயலாது! புரட்சிக் குரல் கொடுக்க முடிந்திராது! தம் பெயரையும் வெளிப்படுத்த இயலாத புறப்பகையின் சூழ்ச்சியும் கொடுமையும் மிகுந்து வந்த காலம் அது? அக்காலத்தில்தான் வாழ்ந்திருந்து, இவ் வின மீட்சிக்காகக் குரல் கொடுத்தார், நம் பேராசான்! வேறு எந்த இனத்தவர்க்காகவும் அவர் இதனைக் கூறவில்லை. இவ் வேதுங் கெட்ட தமிழினத்துக்காகத்தான் குரல் கொடுத்தார் அந்த மேதை!

ஆனால், எங்கோ பல்லாயிரங் கற்களுக்கு அப்பால் பிறந்த மார்க்சின் குரல் நமக்குக் கேட்கிறது! எங்கெல்சு குரல் நமக்குக் கேட்கிறது! இலெனின் குரல் நமக்குக் கேட்கிறது! யார் யார் குரல்களோ நம் செவிகளில் விழுகின்றன! ஆனால் நமக்காகச் சிந்தித்த, நமக்காக எச்சரித்த, நமக்காகவே வாழ்ந்த, நம் மண்ணில் தோன்றிய, இவ் வின நல மீட்பரின் குரல் நமக்குக் கேட்கவில்லையே! கேட்டாலும் பொருள் மாறி ஒலிக்கிறதே! அஃதென்ன கொடுமை! அதுதான் உட்பகையுற்ற குடியின் தன்மை! அந்த உட்பகையைத் தொலைத்தாலன்றி இவ் வினம் முன்னேறுது என்பது, அவ் வின நலப் பேராசான் நமக்குரைத்த நன்னெறி என்பதை நாம் அனைவரும் ஒருங்கே உணர வேண்டிய, உணர்ந்து ஒற்றுமைப் பட வேண்டிய காலம் இதுவே! செய்வோமா? ○

'தமிழ் இலக்கியத்தில் தமிழின வீழ்ச்சியும் தாழ்ச்சியும்'
புலவர். பொதிகைச் செல்வனார், பவானி
அவர்கள் எழுதும் கட்டுரைத் தொடர் விரைவில் 'தென்மொழி'யில் தொடரும்.

தமிழக தமிழ்நெறி!

பாவலர். அ. பு. திருமாலனார்.

இந்த நிலையினைத்தான் இப்பொழுது நாம் பார்க்கின்றோம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகமாக! இது காலம் பெரியார் காலம், மறைமலையடிகள் காலம். இன்னும் சரியாகச் சொல்லப் போனால் வள்ளுவர் காலம் என்று கூடச் சொல்லலாம். வள்ளுவர்தாம் முதன்முதலாக ஆரியத்தை எதிர்த்த அறிஞர். ஆரியத்தை, பார்ப்பனியத்தை, இப்பொழுது கூறப்படுகின்ற இந்து மதத்தின் அன்றைய அடிப்படைக் கொள்கைகளை எதிர்த்த முதல் அறிஞர் வள்ளுவர்.

இப்பொழுது இந்து மதத்துக்காரன் கூட வள்ளுவரைப் பற்றிப் பேசுகின்றான். திருக்குறளை எடுத்து வைத்துக் கொண்டு பேசுகின்றான். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்னார் வள்ளுவர். ஆனால் இந்து மதத்தில் சட்டம், பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரன் என்ற பிரிவுகள் உண்டு. எனக்குத் தெரிந்த ஒருவர், பொறியாளர் ஒருவர் பினாங்கில் இருக்கின்றார். இது பற்றித் 'தமிழ்நிலத்தில்' கூட நான் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றேன். அந்த அன்பர் இந்து சமயக் கழகத்தில் ஒரு கிளைக்குத் துணைத் தலைவர். இந்துப் பொறியாளர்களெல்லாரும் சேர்ந்து கொள்வார்கள். இந்து சமயக் கழகத்தில் இருக்கின்ற ஆட்கள் எல்லோரும் எளிய ஆட்களல்லர். எல்லோரும் ஆங்கிலம் பயின்ற பெரிய பெரிய ஆட்கள். தமிழ் தெரியாது அவருக்கு. தமிழ் படிக்காதவருக்குத் தமிழ்ப் பண்பாடு பற்றியும் தெரியாது. தமிழ்ச் சமயம் பற்றியும் தெரிவதற்கு வழியில்லை. இந்து மதம் அமெரிக்காவிற்குச் சென்று, அமெரிக்காவிலிருந்து இங்கே வந்திருக்கின்றது. அமெரிக்கக்காரன் இந்து மதத்தைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதுகின்றான். அதைத்தான் படித்திருக்கின்றார்கள். ஆனால் இந்து மதத்தைப் பற்றி...இந்துத் தர்மங்களைப் பற்றித் தமிழில் இருக்கின்ற 'செய்திகள்' அவருக்குத் தெரியாது. நேராக சமசுக்கிருதத்தில் இருப்பது கூட அவருக்குத் தெரியாது. சமசுக்கிருதத்திலிருந்து புனைவுகள் செய்து ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்டு வருகின்ற நூல்களைப் படித்துவிட்டுப் பலர் இந்துக் கழகத்தில் இருக்கின்றார்கள். நமக்குத் தெரிந்த அந்த அன்பர்...எதற்கோ ஒரு முறை அவரைக் காணச் சென்ற பொழுது, என்ன காரணமோ தெரியவில்லை; நம்முடைய நூல் ஒன்றை அங்கே கொடுத்திருக்கின்றார்கள். அ'தை அவர் பொழுது போக்கிற்காகப் படித்துக் கொண்டே வந்திருக்கின்கின்றார். நேராக அங்கிருந்து வந்து இந்துக் கழகத்திலே விலகல் மடலை கொடுத்திருக்கின்றார். அங்கே ஆராய்ச்சி பண்ணுவார்களாம். என்ன ஆராய்ச்சி என்றால்...அங்கு எல்லோரும் கூடிப் பேசுவது; என்னவென்றால்...இவன் என்ன சாதி...அவன் என்ன சாதி என்றே ஆராய்ச்சிப் பண்ணுவார்களாம். இவனுக்குச்

சொந்தக்காரன் யார், அவனுக்குச் சொந்தக்காரன் யார், என்று ஆய்வு நடத்துகின்றார்களாம். அப்படியே, அதற்காகவே ஒரு திணைக்களத்தையே(துறையை) வைத்து நடத்திக் கொண்டிருக்கின்றார்களாம்.

இந்து என்றால் அவன் சாதி இல்லாமல் இந்துவே கிடையாது! ஆகவே சாதியை வைத்துக் கொண்டிருப்பவன் எப்படிக் குமுகாயத்தை ஒன்று படுத்த முடியும்? பகவான் கண்ணனே சொல்லுகின்றான் கீதையிலே! "எவனொருவன் தத்தமது சாதிக்குரிய கடமைகளை ஒழுங்குறச் செய்வானோ, அவன்தான் எனது பாதார விந்தத்தை அடைவான்!" என்று. கடவுளே அப்படிச் சொன்னால் அப்புறம் இவர்கள் என்ன செய்வார்கள்?

எனவே, இந்து என்றால், அது சாதி நிலைக்கு உட்பட்டதே! வள்ளுவர் கூறுகின்றார் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று. அவர்கள் ஆசிரியர்கள், நான் பாவலர், இவர் தொழிலாளி, அவர் தலைமை ஆசிரியர், மாணவர்... அந்தந்த நிலையிலே சிந்திக்கின்ற நிலையிலே அவர்களுடைய அறிவைப் பயன்படுத்துகின்ற முறையிலே அவர்களுடைய தொழில் முறையிலே சில சிறப்புகள் இருக்கலாமே ஒழிய, பிறக்கின்ற நிலையிலே பிறப்பாலே யாருக்கும் உலகினில் வேற்றுமைகள் இருந்துவிட முடியாது. பிறப்பொக்கும் எல்லா மக்கட்கும் என்று சொல்லவில்லை வள்ளுவர், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்னார்! உனக்கு மட்டுமா? ஆடு, மாடு, எறும்பு எல்லாவற்றிற்கும் சொன்னார். எல்லாம் ஒரு வழியாகத்தான் வரவேண்டும். ஒரு மாதிரியாகத்தான் பிறக்க வேண்டும். "உயிர்நீரும்(சுக்கிலமும்) கருநீரும் (சுரோணிதமும்) ஒன்றாய்க் கலந்தால்தான் பிறப்பு". இதில் ஒன்றும் வேறுபாடே இல்லை. சிவவாக்கியர் சொல்லுகின்றார்,

"மாதம் மாதம் தூமைதான்
மறைந்து போனதும் தூமைதான்"

அந்த மாதா மாதம் வெளிப்படுகின்ற தூமை(கருநீர்) மறைந்து விட்டால் அதுதான் உருவமாகிறது.

"இதில் வேதமேது நாதமேது
நாற்குலங்க ளேதடா" என்றார். இது தமிழர்

சமயம். அ'து இந்துமதம்.

அதேபோல் திருமூலர் என்ன சொல்லுகின்றார்,

"தன்னை யறிய தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அருச்சிக்கத் தான் கிடப்பானே!"

இது தமிழர் சமயம், ஆனால் இதை இவன் அறியாமல்--இவனெங்கே தன்னை யறிவது- கொஞ்சம் சிந்தனைக்குரிய கேள்விகளைக் கேட்டால், அவன் நாத்திகனடா! என்கிறான்.

ஐன்சுடைன் பற்றிப் படித்தவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இன்றைய அணுவியல் தந்தை, இன்றைய அணுவியலறிஞர்களுக்குத் தலையாக இருப்பவர் ஐன்சுடைன். இன்றைய சார்புக் கொள்கையைக் கண்டு பிடித்தவர் ஐன்சுடைன். பொருளுள் ஆற்றலும் ஆற்றலுள் பொருளும் சமம் என்று சொல்லுகின்றவர். "$E = MC^2$" என்ற மெய்ம்மக் கொள்கையைச் சொன்னவர் ஐன்சுடைன். இன்றைக்குப் புடவியை அளக்கின்ற ஒரு நிலை இருக்கின்றதென்றால் அவருடைய சார்புக் கொள்கையால்தான் அளக்கின்றார்கள்.

அந்த ஐன்சுடைன் சொல்லுகின்றார்...அறிவியலை அ'தாவது சிந்தனையைப் புறக்கணிக்கின்ற தென்பது சமயமாகாது! அறிவியலை ஏற்றுக் கொள்வதுதான் சமயம். அறிவியலைப் புறக்கணிப்பது உறுதியாகச் சமயம் இல்லை, அறிவியலைப் புறக்கணிக்கின்ற மதமானது குருடாகும்! நான் கேட்கிறேன், இந்து மதம் எந்த அளவிற்குச் சிந்தனைக்கு இடம் தரும்? ஆனால் தமிழர் சமயம் உங்களுக்கு, எந்த அளவு அறிவியல் கேள்விகளைக் கேட்டாலும் விடை கொடுக்கும்;

ஐன்சுடைன் சொல்லுகின்ற ஒவ்வொரு மெய்ம்மத்தையும் நான் திருமூலரின் பாடல்களிலே காணுகின்றேன். 'விளக்கம்' என்பது என்னென்று கேட்டால் ஐன்சுடைன் சொல்லுகின்றார், 'ஒன்றை விளக்கிக் கொண்டே போகின்ற பொழுது விளக்க விளக்க சிக்கல்கள் வரும்' என்று சொல்லுகின்றார்...அதுவும் அறிவியலிலே!

திருமூலர் சொல்லுகிறார்...

"விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவலு மாமே!"

என்று. ஐன்சுடைன் இப்பொழுதுதான் வந்தார்; திருமூலர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே வந்துவிட்டார். இது தமிழர் சமயம். இந்து மதத்திலே இ'து இருக்கின்றதா? எனவே அறிவார்ந்த தமிழர் சமயம் நம்முடைய சமயமையா! அறிவற்ற மூடத்தன்மைகளைக் கொண்டது இந்து மதம். அந்த மதத்தினின்று வெளியேறாத வரையில்...அந்த மதத்தை நாம் உணராத வரையில், நாம் தமிழராக வாழ முடியாது; நாம் தமிழராக வாழ முடியாத வரையில் நம்முடைய தமிழ் மொழியின் அருமை பெருமைகளை நாம் அறிய முடியாது, நமக்குத் தெரிய வராது!

நம்முடைய மொழியில்தான் நம்முடைய பண்பாடு இருக்கின்றது. நம்முடைய மொழியில்தான் நமக்குச் சமயம் இருக்கின்றது. நம்முடைய மொழியில்தான் சிறந்த இலக்கியம் இருக்கின்றது. மாந்தன், எதை நோக்கி நடைபோடுகின்றான் என்றால்

இறப்பை நோக்கி நடைபோடுகின்றான். பிறந்த ஒருவன் சாகின்றான். சாவதற்கு முன்னால் அவன் என்ன செய்ய வேண்டும்? எதற்காகப் பிறக்க வேண்டும் என்பது ஒரு மெய்ம்மம்! அந்த மெய்ம்மத்தை உணர்ந்து அடைவதற்குப் பெயர்தான் இலக்கியம். வாழ்வினுடைய மற்றொரு மெய்ம்மந்தான் இலக்கியம். வாழ்வுதான் இலக்கியம். எனவே அப்படிப்பட்ட வாழ்வு இலக்கியங்கள் நம்மிடையே இருக்கின்றன. தொல்காப்பியம் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே உள்ளது! தலைவன் என்றால் யார்? தலைவி என்றால் யார்? இல்லறம் என்றால் என்ன? காதல் என்றால் என்ன? ஒருவன் எப்படிப் பார்ப்பான்? ஒருத்தி எப்படிப் பார்ப்பாள்? அன்றைக்கே மனவியல்! ஆனால் இன்று...இந்து மத இழி குழியிலே விழுந்து, சாதியின் இழி தன்மையிலே நெளிந்து கிடக்கின்ற புழுக்களாக இருக்கின்றோம்!

எனவே தான் இந்தத் தமிழன் தமிழனாக இருக்க வேண்டும்! தமிழ் நெறியின் பாற்பட வேண்டும்! தமிழ் இலக்கிய வாழ்வு தமிழ்ப்பண்பாட்டு அடிப்படைகளையெல்லாம் சிந்திக்க வேண்டும்! அந்தப்பண்பாட்டு வாழ்வியல் முறைகளைப் பெற வேண்டும்! என்று எண்ணுகின்றோம். அந்த அடிப்படையில்தான் ஓர் இயக்கம், ஓர் உண்மை உழைப்பியக்கம் இப்பொழுது முகிழ்த்து விட்டது!

இது காலம்! மனோன்மணியம் சுந்தரனார் காலம்! மறைமலையடிகள் காலம்! பெரியார் காலம்! அண்ணா காலம்! அண்ணா காலத்தோடு கதை முடிந்தது! எனவே இந்தக் காலம் வேண்டாம். பெரியார் காலத்தோடு அண்ணா காலத்தோடு அது முடிந்தது! இனி, பெருஞ்சித்திரனார் காலம்! இந்தப் 'பெருஞ்சித்திரனார்' காலத்திலே இனமும் மொழியும் ஒன்றாக இருப்பதை நாம் காணலாம்.

அடுத்து நம்முடைய திருமாவளவன் அவர்கள் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று திருக்குறளைப் பற்றிச் சொன்னார்கள். எழுத்துகளுக்கெல்லாம் 'அ' முதலாவதாக இருப்பது போல இறைவன் உலகத்திற்கு முதலாவதாக இருக்கின்றான் என்றுதான் சொல்லிக் கொடுத்தார்கள். திருவள்ளுவர் அந்த மேலோட்ட நோக்கில் சொல்லவே இல்லை. அவர் இன்னும் ஆழமாகக் குறிப்பிட்டுள்ளதாக நான் உணர்கின்றேன். முல்லையைப் பார்த்திருக்கின்றீர்களா? முல்லையைப் பார்க்காத ஒருவனுக்கு, அதைப் பார்த்த ஒருவன் அது பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் என்னவென்று சொல்ல வேண்டும்? முல்லை மல்லிகை மாதிரி இருக்கும் என்பான். கேட்டவன் மல்லிகைதான் முல்லை என்று கூட நினைத்துக் கொள்வான்! அஃது அவனுடைய பக்குவ நிலையைப் பொறுத்தது! அது போல அறிவுக் கருத்துகளை அறிவற்ற மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றவன், அவனது உணர்வார்ந்த உண்மைத் தன்மைகளை, 75 விழுக்காடு ஒன்றைக் காட்டிச் சொல்வான். 'இப்படி இருக்கும்'

என்று. ஆனல் எடுத்துக் கொள்கின்ற பக்குவமடையாதவன் அதை எப்படி வேண்டுமானுலும் எடுத்துக் கொள்ளலாம்! அந்த அடிப்படையிலே வள்ளுவர் கூறிய அந்த அகர முதல எழுத்தெல் லாம் என்பதில் இறைமைக்கு உவமை என்ன என்று கேட்டால் 'அ' எழுத்தைக் காட்டுகின்ருர். எழுத்துகளுக்கு 'அ' எப்படி இருக்கின்றதோ அதுபோல உலகத்திற்கு இறைவன் முதல்வன் என்று காட்டுகின்ருர்! இ'து ஓரளவு பக்குவம் பெற்ற பிறகு மிகவும் ஆழமாகப் போவதை நாம் பார்க்கின்ரேம். மொழி என்பது ஒருவன் பெற்றெடுத்து இன்னெருவனிடம் கொடுத்துச் செய்வதன்று. உணர்வு வெளியே வருகிறது...சீற்றத்தைக் காட்ட 'உம்' என்பவன், மகிழ்வை காட்ட 'ஆ...ஆ'...என்று சிரிப்பான். அது போல அந்த உணர்வுகளுக்கு...மொழி கிடையாது. உருவங் கிடையாது. ஒலிக்கு உருவங் கிடையாது. ஒலியை உருவகப் படுத்த வேண்டுமானல், இந்த மாந்தன் உடக்காலமாக(தற்காலிகமாக) ஓர் உருவங் கொடுக்கின்ருன். அந்த உருவ அமைப்பு தான் 'அ'. முல்லையைக் கண்ட ஒருவன் மல்லிகையைச் சான்று காட்டுவான். ஆனல் முல்லைதான் மல்லிகை என்று முடிவு கட்டி விடக்கூடாது, நினைத்து விடக்கூடாது.

'அ' என்ற ஒலியை எண்ணியவர்கள் அதைப் பிறருக்குச் சொல்ல அதற்கு அந்த வரிவடிவத்தை உருவாக்க வேண்டும் என்று நினைத்தவர்கள் அவர்கள் தந்த வடிவம் தான் இந்த 'அ'. இந்த 'அ'வை ஆங்கிலத்தில் 'A' என்று போடுகின்ருர்கள். அ'து அவர்கள் கண்ட வடிவம். 'இ' இது நாம் கண்ட வடிவம். அவர்கள் வேறு மாதிரியாகப் போடுவார்கள். எனவே வடிவங் கள் பல. இறைமைக்கு வடிவங்கள் பல. ஆனல் 'இறைமை' ஒன்று. தமிழர் சமயம் என்பது உயர்ந்த சமயம். அதற்கு மொழியில்லை, இனமில்லை, நாடு இல்லை! பேதமில்லை எவ்வகை அகப்புற வேற்றுமைகளும் இல்லை. அனைத்து மாந்தர்களும் அதைக் கடைப்பிடிக்க வேண்டிய உயர்நெறிக் கொள்கை யுடையது. 'அப்படி உயர்ந்தக் கொள்கையுடைய சமயத்தை .. மதமாக்கி நாற வைத்து விட்டான் நம்மை!' இன்னும் அந்தக் குழியிலிருந்து எழுந்திருக்க முடியவில்லை,

எனவே திருவள்ளுவரை ஆழ்ந்து பார்க்க வேண்டும்! வெறும் பாட்டைப் பார்ப்பது அன்று! இவன் மெய்யுணர்வாளனுக இருந் தால்தான் அந்த மெய்யறிஞனுடைய உள்ளத்தை உணரமுடி யும். இல்லை யென்ருல் அந்த மெய்யறிவாளருடைய உள்ளம் நமக்கு தெரியவே தெரியாது! இவனுடைய உள்ளம் எப்படியோ அப்படித்தான் அது தோன்றும். எனவே அந்தத் தகுதியை, அந்தப் பக்குவத்தை, அந்த சமயத்தை நாம் அடைய வேண்டும். அந்த சமயத்தை நாம் அடைவோமேயானல் திருவள்ளுவர் உணர்ந்த இறைமையை திருவள்ளுவர் உணர்ந்த சமயத்தை நாம் உணர்வோம். அந்தச் சமயம் வேறு; இந்த மதம் என்பது வேறு!

திருமுறை தில்லையம்பலம் ஏறியது!

தேவார திருவாசக முதலான தெய்வத் திருமுறைகளைத் தில்லை நடராசர் கோயிலில் கீழே நின்றுதான் பாடும் வழக்கம் இதுவரை இருந்து வந்தது. திருமுறைகளை அம்பலத்தின் மேல் பாட குருக்கள் அனுமதிப்பதில்லை. இது திருமுறைக்கு மதிப்புக் குறைவாக இருந்தது. மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர். பர். வ. சுப. மாணிக்கனார் தலைமையில் திருமுறை இயக்கக்குழு போராடத் தொடங்கியது. திருமுறைகள் குட முழுக்கு விழாவிற்குள் தில்லையம்பலம் ஏறாவிட்டால் உண்ணா நோன்பு தொடங்கவும் முடிவு செய்தது. மக்களும், மாணவர் களும் திரளாக இதற்கு ஆதரவு தந்தனர். தமிழக அரசும் இக் கோரிக்கைக்கு ஒத்துழைத்தது.

கோட்டாட்சி உயர் அலுவலர்கள் பொதுக் குழு குருக்க ளிடம் தமிழுக்கும் திருமுறைக்கும் உரிய மதிப்புக் கொடுக்க வேண்டும் எனவும் 11-2-87-ஆம் நாள் நடைபெறும் குடமுழுக்கு இடையூறின்றி நடைபெற வேண்டும் எனவும் எடுத்துச் சொன் னார்கள். உண்மை நிலையை உணர்ந்த குருக்கள் பெருமக்கள் இசைந்தனர். 1-2-87-ஆம் நாள் முதல் திருமுறைகள் தில்லை யம்பலத்தின் மேல் குருக்களால் பாடப் பெறுகின்றன. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க மாற்றமாகும். இது பல்லாயிரக்கணக் கான மக்கட்கு மகிழ்ச்சியையும் உணர்ச்சியையும் தந்தது.

தெய்வத் தமிழ்த் திருமுறை தலைமையான தில்லைக் கோயி லில் அம்பலம் ஏறி முழங்கத் தொடங்கி விட்டது. இனி எல்லாக் கோயில்களும் தமிழ் வழிபாட்டைத் தானே விரைவில் மேற் கொள்ளும் எனவும் இதற்கு ஓர் இயக்கம் தேவைப்படாது என வும் நம்புகின்றோம். மக்களின் தமிழ்ப் பக்குவத்தையும் அரசின் தமிழுறுதியையும் கோயிலாளர்கள் புரிந்து செயற்படுவார்க ளாக.

—வ. சுப. மாணிக்கம், காரைக்குடி-2.
தலைவர், திருமுறை இயக்கக்குழு.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாம் தமிழர்கள். இங்குக் கூறிய உயர்ந்த நெறி நம்முடைய நெறி. அந்த உயர்ந்த நெறி ஒரு காலத்தில் உலகெங்கும் இருந் தது. இன்றைக்குச் சுருங்கிப் போய் விட்டது. தமிழரிடத்திலே கூட இல்லை. இன்னும் சரியாகச் சொன்னால் இந்த மாந்த இனத் திற்கே ஒரு சரியான வழியைக் காட்டுகின்ற பொதுப்படையான நெறி நம்முடைய நெறி! இது வரலாறு.

எனவே நம்மை நாமே உணர்வோம். அதற்கு வழியாக, அதற்கு அடியாக, அதற்கு மூலமாக, அதற்குத் தெளிவு தரத் தக்கது ஆக இருப்பது தமிழ் மொழி ஒன்றே! அந்தத் தமிழ் மொழி தருகின்ற அதன் உண்மையான வாழ்வியல் பண்பாட்டு நூல்களைத் தொட வேண்டும். அந்த நூல்களைத் தொட்டவர்க ளின் கருத்துகளைக் கேட்க வேண்டும். திசை திருப்புகின்ற நூல் களும் திசை திருப்புகின்ற சமயமும்-மதமும்-நமக்குத் தேவை யில்லை. ஓர் இனத்தை ஏற்றுக் கொள்ளாத மதம், ஓர் இனத் தைப் பிளவு படுத்துகின்ற மதம், ஓர் இனத்தைக் கூறு செய் கின்ற மதம் நமக்குத் தேவையே இல்லை. (முற்றும்)

சிறப்புமடல் :

தென்மொழிக் கொள்கையே தமிழர்க்கு விடிவு தருவது!

(தென்மொழி, சுவடி 22 ஓலை 12-இல் வெளிவந்த 1182-ஆம் மடலுக்கு விடையாக எழுதப் பெற்றது இம்மடல்.)

ஐயா, துமுக்கி(துப்பாக்கி) யாரே? தென்மொழி. சுவடி 22 ஓலை 12-இல் வெளியிடப்பட்டிருந்த உமது மடலைப் பார்த்தேன். அதில் இந்தியா ஒன்றாக இருக்கும்வரை இந்துமதம் இருக்கும். இந்துமதம் இருக்கும்வரை பார்ப்பன வல்லாண்மையும் இருக்கும் என்கிற, தென்மொழிக் கொள்கையைத் தவறு என்றும், தமிழ் நாடு தனி நாடாய் ஆனாலும் பார்ப்பன இந்துமத வல்லாண்மை இருந்தே தீருமென்றும், எனவே தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டிற்கும் கேடுபயக்கும் இந்துமதத்தை விட்டு வெளி யேறாத வரை தமிழருக்கு விடுதலை இல்லை, விடிவு இல்லை என்பது தான் உண்மை நிலை என்றும், தென்மொழி நேராக உண்ணாமல் தலையைச் சுற்றி உண்ணச் சொல்கிறது என்றும், சிந்திக்குமா என்றும் தருக்கோடு தமுக்கடித்திருக்கிறீர்.

சிந்திக்க வேண்டியவர் நீர்தாம், தென்மொழியன்று. தமிழ், தமிழன், தமிழ்நாடு மீண்டும் பெருமையோடு, ஏற்றத்தோடு, புகழோடு பிறர் தலையீடின்றித் தன்னுரிமையோடு வாழவேண்டு மானால் விடுதலையைத் தவிர வேறு வழியில்லை என்பதில் தென் மொழியின் கருத்தும் தந்தை பெரியாரின் கருத்தும் ஒன்றேயா கும். கீழே உள்ள தந்தை பெரியாரின் கருத்தைப் படியுங்கள். தென்மொழியின் கருத்து தவறா, உங்கள் கருத்து தவறா, என்பது உங்களுக்கே நன்கு விளங்கும்.

''இன்றைய குடியரசு ஆட்சியில் வடநாட்டான் ஒருவன்-தான் - பார்ப்பான்தான்-தலைமை அமைச்ச(பிரதம)ராக, வட நாட்டு இந்திக்காரன் அல்லது பார்ப்பான் ஒருவன்தான்-குடி யரசுத் தலைவராக - ஆட்சியாளராக - வரமுடியுமே அல்லாமல், இந்த இந்தியக் கூட்டாட்சி உள்ள வரையில் தமிழன் ஒருவன் ஒருநாளும் ஆட்சிக்கு வர முடியாது; தமிழன், தமிழ், தமிழ்நாடு ஒருநாளும் தன்னுரிமையற்ற தன்மையிலிருந்து அடிமைக் குடி யாய் இருப்பதிலிருந்து கடுகளவும் மாற முடியாது.

ஆகவே, இந்தப் பெருங்கேட்டிலிருந்து தமிழ்நாடும் தமிழ னும் தப்பிப் பிழைத்து விடுதலை பெறவேண்டுமானால், இந்தியக் கூட்டாட்சி என்கிற பார்ப்பன ஒரே ஆளுமை வல்லதிகார ஆட்சி யிலிருந்து விலகி, தமிழ்நாட்டைத் தானே தன்னுரிமைத் தமிழ் நாடு ஆக்கிக் கொண்டாலன்றி வேறு எக் காரணத்தாலும் எக் கிளர்ச்சியாலும் முடியவே முடியாது என்பதைத் தமிழ்மக்கள் உணர வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

—பெரியார்-95-மலர்.

''நாமிருக்கும் இந்தத் தேசம் இந்தியா என்பதை ஏற்றுக் கொண்டால், நாம் இந்து என்பதை ஏற்றுக் கொள்ள வேண் டும். நாம் இந்து என்பதை ஏற்றுக் கொண்டால், நான்காம் சாதியாகிய சூத்திரன் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் சூத்திரன் என்பதை ஏற்றுக் கொண்டால், நாமெல்லாம் தாசி மக்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்! இந்த இழிவிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி தமிழ்நாடு தனிநாடா வது தான்.''

சென்னை-வண்ணையில், பெரியார் பேச்சு-25-8-73.

ஏன் சட்டப்படி நாமெல்லாரும் இந்துமதப்பட்டியலில் சேர்க் கப் பட்டுள்ளோம்? பார்ப்பனியத்திற்குப் பாதுகாப்பு இந்து மதம். இந்து மதத்திற்குப் பாதுகாப்பு இந்திய அரசியல். பார்ப்பன அரசே இந்திய அரசு.

ஆகவே, பார்ப்பன வல்லாண்மையை ஒழிக்க வேண்டுமா னல் இந்து மதப் பார்ப்பன வல்லதிகார இந்தியக் குடியரசு ஆட்சியில் இருந்து விலகுவதைத் தவிர வெறெதனுலும் முடியவே முடியாது.

உமது கருத்துப்படி ஐந்து கோடித் தமிழரையும், இந்து மதத்தை விட்டு விலகச் செய்வது நடவாத செயல். அப்படியே நடப்பதாக வைத்துக் கொண்டாலும், தமிழரின் அடிமைத்தனம் ஒழியாது. அடிமைத்தனம் ஒழியாமல் விடுதலை கிடையாது. விடுதலை கிடைக்காவிட்டால் விடிவும் கிடையாது.

எனவே, இந்துமதம் இருக்கும் வரையில் பார்ப்பன வல்லாண்மை இருந்தே தீரும் என்னும் தென்மொழிக் கொள் கையே தமிழருக்கு விடுதலையும் விடிவும் தரும் ஏற்புடைய கொள் கையாகும். உமது கொள்கை ஆகாத, நடவாத, பயனற்ற, வீண் பிதற்றல் கொள்கையாகும்.

—பாவலர். சின்னப்பனுர், கொம்மக்கோவில்.

இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்

0 இந்தியத் தேசியமும் மாயை! திராவிடத் தேசியமும் மாயை! தமிழ்த் தேசியந்தான் மெய்யானது! எனவே தமிழக இளை ஞர்கள் இந்திய, திராவிட மாயைகளிலிருந்து விடுபட்டுத் தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆயிரக்கணக்கான வரலாற்றுச் சான்றுகளுடன் தம் நுண்மாண் நுழைபுலத்தால் விளக்குகிருர் இதன் ஆசிரியர்-

பேரறிஞர் குணா.

420 பக்கங்கள். விலை: உருபா 25. சலுகைவிலை உரு. 20

தாமரை கலை இலக்கிய மன்றம்

16, சபாபதி தெரு, (காமராசர் சாலை குறுக்கு) பெங்களூர்-1

பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

(அவ்வப் பொழுது சில இதழ்களுக்காகவும், சில பட்டத்துறை ஆய்வுகளுக்காகவும், சில வெளியீட்டு நிறுவனங்களுக்காகவும் ஆசிரியர் கொடுத்த நேருரைகள் இங்குத் தொடர் கட்டுரைகளாகத் தரப் பெறுகின்றன. இவற்றுள் பலவகையான செய்திகள், வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கப் பெற்றுள்ளதால், அவை அன்பர்களுக்குப் பயன்படும் என்று கருதுகிறோம். --ஆ-ர்)

(6-1-80 அன்று மாலை 'தமிழியக்கம்' இதழுக்குத் தந்த நேருரை. நேருரை கண்டவர் திரு வீ. அரசு என்பவர்.)

வினா. 1. எத்தகைய குறிக்கோளுக்காகப் பாடுபடுகிறீர்கள்?

எப்படியாகிலும் இத்தமிழகத்தை
முப்படி உயர்த்திடல் வேண்டும்--என்
மூச்சதற் குதவிடல் வேண்டும்!
முப்படி நிலைகள் : மொழி, இனம், நாடு.

2 தென்மொழி இயக்கத்திற்கும் மறைமலையடிகளின் தனித் தமிழ் இயக்கத்திற்கும் வேறுபாடுண்டோ?

தென்மொழி இயக்கம் என்று அமைக்கப்பட்ட ஓர் இயக்கம் இல்லை; அமைந்த இயக்கம்.

மறைமலையடிகளும் எந்த ஓர் இயக்கத்தையும் தனித் தமிழ்க்காக அமைத்ததாகத் தெரியவில்லை.

இருப்பினும் உங்கள் வினாவின் உட்பொருளாக அமைந்த கருத்துக்கு விடை சொல்கிறேன்.

அடிகளார் இயக்கம்(அஃதாவது அவர் கருத்து) மொழி, சைவசமயம் என்பவற்றைத் தழுவியது. தமிழின மேம்பாட்டு முயற்சியும் அவர் எழுத்துகளில் உண்டு. ஆனால் தென்மொழி இயக்கத்திற்கு(அஃதாவது தென்மொழிக் கொள்கைக்கு) மூன்று நோக்கங்கள் உண்டு. தூய தமிழ் வளர்ச்சி; தமிழின அடிமை நீக்க முயற்சி; தமிழக விடுதலை.

3. மாந்தன் மாந்தக் குலத்தின் குழந்தைப் பருவத்தில் மொழியை உருவாக்கினான். நீங்கள் இப்பொழுது சொல்லும் கரணியங்களை அப்போதைய மாந்தன் எண்ணுவதற்கு வாய்ப்பிருந்திருக்குமா? ஆக, எல்லாச் சொற்களும் கரணியத்தோடு அமைத்திருக்க வாய்ப்புண்டா?

இப்பொழுது நெல்லை நாம் விளைவிக்கிறோம். தொடக்கத்தில் நெல் தானே விளைந்தது. பக்குவப் படுத்தப் பெறாத நிலத்தில் தொடக்கத்தில் பயிர்கள் தாமே விளைந்ததுபோல், அறிவு விளக்கம் பெறாத மனத்தில் உணர்வுகள் தாமே தோன்றின. அவை இயற்கையான வெளியீடுகள் ஆகையால் கரணிய முறையில் அமைந்திருந்தன. உணர்வு வெளிப்

பாடுகள் ஒலித் தொகுதிகளாக அமைந்து ஒழுங்குபட்டுச் சொற்களாகவும் மொழிகளாகவும் படிநிலையுற்றன. தமிழ் மூத்த முதன் மொழியாதலின் இயற்கைக் கூறுகள் அதில் மற்ற மொழிகளைவிட முழுமை பெற்றிருக்கின்றன. அவையே சொற்களுக்குக் கரணியங்களாக அமைந்தன. இனி, கரணியங்களோடு சொற்கள் அமைவதற்கு முன், அவை வெறும் ஒப்பொலிகளாகவும் உணர்வொலிகளாகவும் அமைந்தன. இயற்கையின் இடியொலிக்கும், அலையோசைக்கும், மாந்தனின் சிரிப்பொலிக்கும் அழுகை ஓசைக்கும் கரணியங்கள்(சொல்லளவில்) விளங்காமை போலவே மொழியின் சில உணர்வொலிகளுக்கும் கரணியங்கள் விளங்குவதில்லை. அத்தகைய மூல ஒலிகளையும் அவற்றை வேராகக் கொண்ட சொற்களையுமே இடுகுறிச் சொற்கள் என்று அழைக்கின்றோம். இயற்கையின் புதிர்கள் விடுவிக்கப் பெறும் பொழுது அத்தகைய சொற்களுக்கும் கூடப் பொருள்கள் விளங்கலாம்.

4. 'தென்மொழி' பல்லாண்டுகளாகத் 'தனித்தமிழ்' எனும் மொழி நடைக்கு முதன்மையான இடத்தைத் தந்துள்ளது. தமிழனுடைய வாழ்க்கைச் சிக்கல் மொழி செம்மை பெறுவதால் மட்டும் தீர்ந்து விடுமா?

தமிழனுடைய வாழ்க்கைச் சிக்கல் மட்டுமன்று, எந்தப் பகுதி மாந்த இனத்தின் வாழ்க்கைச் சிக்கலுக்கும் பல அடிப்படையான முன்னேற்றத் தடைகள் கரணியங்களாக இருக்கும். அதில் மொழித் தாழ்ச்சியும் ஒன்று. குறிப்பாகத் தமிழனுடைய வாழ்க்கைச் சிக்கலுக்கு அவன் மொழிப் பற்றின்மையும் இன அடிமைப் பாடும் நாட்டுப் பறி கொடுப்பும் பண்பாட்டுச் சீரழிவும் பொருளியல் தாழ்ச்சியும் அரசியல் அதிகார வீழ்ச்சியும் இன்னும் சிலவும் கரணியங்களாக உள்ளன. அவற்றுள் அவன் உணர்வு விழிப்படைவதற்கும், மற்ற அடிமை நிலைமைகளைப் பற்றி அவனைச் சிந்திக்க வைப்பதற்கும் மொழி உதவும் ஆகையால் அதன் அடிமை நீக்கம் முதலில் வேண்டப் பெற்றது. இனி, அதன் இன்றியமையாமை உணர்த்தப் பெறும் அதே பொழுதில் அதைத் தொடர்ந்த பிற நிலைகளுக்கும் அதே வகையான முயற்சி தேவைப் படுகிறது. மொழி மட்டும் தமிழனுடைய வாழ்க்கைச் சிக்கலைத் தீர்த்து விடும் என்று எங்கும் எவரிடத்தும் சொல்லப் பெறவில்லை. அதுபோலவே ஓரினச் சிக்கலை வேறு எதன் பொருட்டாகச் செய்யும் தனிமுயற்சியும் தீர்த்துவிடும் என்று எவரும் சொல்லி விடவும் முடியாது.

5. நீங்கள் அடைய விரும்பும் குமுகாய அமைப்பு வள்ளுவர் கண்ட, கழகப் புலவர்கள் கண்ட குமுகாய அமைப்பா?

அப்படி யாரும் கூறவில்லையே. காலத்தையொட்டி அறிவையொட்டி மனத்தையொட்டி வளரும் எந்தக் குமு

காய மறுமலர்ச்சியையும் நான் ஏற்றுக் கொள்வேன். அத்தகைய குமுகாய அமைப்பில் வள்ளுவர் கருத்துகளும் கழகப் புலவர்கள் கருத்துகளும் கலந்திருக்கவே இருக்கும். ஏனெனில் வளரும் எந்தப் பகுதி குமுகாய அமைப்பும் உலக அறிஞர்கள் அனைவரின் கருத்துகளிலும் தேர்ந்த சிறந்த முடிவுகளை ஒப்பவே செய்யும். புறக்கணிக்கும் என்று சொல்ல முடியாது.

6. இயக்கம்—என்பது எத்தகைய அமைப்புகளோடு இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்? தென்மொழி இயக்கம் அவ்வாறு உள்ளதா?

ஓர் இயக்கத்திற்கு தேர்ந்து வரையறுக்கப் பெற்ற கொள்கையும், ஒப்புக் கொள்ளப் பெற்ற கட்டுக் கோப்பும், அமைக்கப் பெற்ற நெறிமுறைகளும், கொள்கைகளைச் செயற்படுத்துவதற்குரிய திட்டங்களும், அவற்றுக்கான பொருள் வாய்ப்பும், இவற்றைக் கொண்டு செலுத்துதற்குப் போதுமான உறுப்பினர்களும் வேண்டும். முன்பே கூறியுள்ளேன், தென்மொழிக்கு அமைக்கப் பெற்றதாக ஓர் இயக்கம் இல்லை. தானே அமைந்த ஓர் இயக்கமாகவே தென்மொழி இயங்குகிறது.

7. புதினம், சிறுகதை ஆகிய படைப்புத் துறைகளில் தனித்தமிழன்பர்கள் திறப்பாடு(சாதனை) புரிந்துள்ளார்களா?

தனித்தமிழியக்கம் வளர்ந்துள்ள அளவிற்கு அத்தகைய விளைவுகளும் வளர்ந்துள்ளன. இனி எதிர்காலத்தில் அத்துறைகளில் மட்டுமன்று அறிவியல் முதலிய எல்லாத்துறைகளிலும் அந்நிலை இன்னும் செழிப்பாக வளரவே செய்யும்.

8. 'தென்மொழி' எனும் இதழ் இயக்கத்தில்—பலர் தொடர்ந்து நிலைத்திருக்காமைக்குரிய கரணியம் என்ன?

'தென்மொழி' இதழ் இயக்கம்—என்னும் சொற்றொடர் இக்கேள்விக்குரிய சரியான பொருளைத் தராது என்று கருதுகின்றேன். அதைத் 'தென்மொழிப் பணியில்' என்று மாற்றிக் கொண்டால் சரியாக இருக்கும் என்று நினைத்து விடை கூறுகின்றேன்.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகும் மாந்தர் பலர்.
உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

9. 'தென்மொழி' தமிழ் மக்களுடைய பொதுச் சொத்து என்று பன்முறை எழுதியுள்ளீர்கள். உண்மையிலேயே பொதுச் சொத்தாக மாற்றியுள்ளீர்களா?

பொறுத்திருந்து பாருங்கள்.

10. ஓரிறைப் பேராற்றல் அறிவியலுக்கு முரண்பட்டதில்லையா?

இல்லை. அறிவியலுக்கு முரண்பட்ட எந்தக் கருத்தும் என் நாவலினின்றோ வாயினின்றோ எப்பொழுதும் வெளிப்பட்ட தில்லை.

11. 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி' என்னும் சிவத்தம்பியின் பொத்தகம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

நான் இன்னும் அந்த நூலைப் படிக்கவில்லை. விரைவில் அதுபற்றி என் கருத்தை வெளிப்படுத்துவேன்.

12. கைலாசபதி, சிவத்தம்பி ஆகிய திறனாய்வாளர்கள் பற்றி உங்கள் கருத்து?

இருவரும் தங்கள் கருத்துகளையே தங்கள் திறனாய்வு முடிவாகப் புகுத்துகிறார்கள் என்று கருதுகின்றேன். திறனாய்வாளருக்கு இருக்க வேண்டிய முகாமையான கருத்துகளில் நடுநிலைமையும், பிறர் கருத்துகளை உண்மைக்கு உண்மையாக மதித்துத் திறனாய்வு செய்ய வேண்டும் என்பதும் தலைமையானவையாகும். இவ்விரண்டு கொள்கைகளும் அவர்களிடத்தில் முழுமையாக இருப்பதாக என்னால் கருத முடியவில்லை.

இதழ் விற்கும் முகவர்கள், அன்பர்கள் கவனத்திற்கு !

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு- ஆகிய இதழ்களை விற்பனை செய்யும் முகவர்களாலும் அன்பர்களாலும் நாம் படும் தொல்லைகளுக்கும், அடையும் இழப்புகளுக்கும் அளவில்லை. அவர்கள் பட்டியல் தொகைகளைத் குறித்த காலத்தில் அனுப்புவதில்லை. சிலர் நிறைய நிலுவை வைத்திருக்கிறார்கள். சிலர் ஏமாற்றும் நோக்கத்துடன் தொகை விடுக்காமலும் எழுதும் நினைவூட்டு மடல்களைப் பொருட்படுத்தாமலும் உள்ளார்கள். இந்த மாத இறுதிக்குள் அவர்கள் தம்தம் நிலுவைகளை எச்சமின்றி விடுத்துக் கணக்கை சரிசெய்து கொள்ள வில்லையானால், அடுத்த மாதத் தொடக்கம் முதல் கட்டாயம் இதழ்கள் விடுப்பது நிறுத்தப் பெறுவதுடன் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கபெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். -அமைச்சர்.

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். -அமைச்சர்.

விளம்பரங்கள் பொய் முகங்கள்!

வானொலியைத் திருப்பினால் 5 நிமையத்திற்கு ஒரு முறை அதை வாங்கு இதை வாங்கு என ஆண் குரலிலும் பெண் குரலிலும் மாறி மாறியும், முகத்தில் கச்சிதமாக ஒட்டிக் கொண்ட புன்னகையுடன் தொலைக்காட்சியில் தோன்றி மறையும் விளம்பர மாதிரிகள்; வானத்தையும் நிலத்தையும் தவிர எல்லாத் திசைகளையும் அளாவிக் கொண்டிருக்கும் விளம்பரப் பதாகைகள்; திரைப் படத்திற்குப் போனால் விளம்பரம்; செய்தித் தாள்களைப் புரட்டினால் பக்கத்துக்குப் பக்கம் விளம்பரம்.

இது விளம்பர ஊழி என்று சொல்கிறார்கள். 'பாட்டா' நிறுவனம் புதிய செருப்பை அறிமுகப்படுத்தித் தடபுடலாக விளம்பரம் செய்வதைப் போல 1984 பொதுத் தேர்தலில் இராசீவ் காந்தியை விளம்பரம் செய்தது 'ரீடிப்யூசன்' (Rediffusion) என்னும் விளம்பர நிறுவனம்.

''தேர்தல் அறிவிப்பையும் வாக்குறுதிகளின் பட்டியலையும் கொடுத்து விட்டுத் தங்கள் நடை உடை, பேச்சுகள் ஆகியவற்றில் நாங்கள் சொல்லும் முறைகளைக் கடைப்பிடித்தால், எதிர்க் கட்சிகளுக்கும் கூட தேர்தல் விளம்பர வேலைகளைச் செய்ய முடியும்'' என்று பம்பாயிலுள்ள ஒரு விளம்பரக் குழுமத்தின் மேலாளர் பேட்டியொன்றில் குறிப்பிடுகிறார்.

ஆக துணி வகைகள், வழலைகள், முகப் பூச்சுகள் மட்டுமல்ல நாட்டின் அரசியலைக் கொண்டு செல்லும் கட்சிகளே விளம்பரக் குழுமங்களின் சொற்படி ஆட வேண்டிய அளவுக்கு விளம்பரங்கள் முகாமை பெற்றுவிட்டன.

மேலோட்டமாகப் பார்க்குமிடத்து இது நமக்குப் புரிவதில்லை. ஆனால் இந்த விளம்பரங்களோ மிகக் கவனமாக மிகத் திறமையாக இலக்கைக் குறி வைத்துத் தாக்கும் ஏவுகணைகளாக நம்மை வந்து தாக்குகின்றன. நமது சிந்தனையைத் தாக்குகின்றன. வாழ்க்கை பற்றி நமது தேவைகள் பற்றி நாம் வைத்திருக்கும் மதிப்பீடுகளை, கருத்துகளைப் புரட்டிப் போடுகின்றன. புதிதாய் உருவாக்குகின்றன. இவையெல்லாம் ஓசைப்படாமல் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

விளம்பரங்கள், முதலாளியம் உயிர் வாழ்வதற்குத் தவிர்க்க இயலாத தேவை. ஒரே பொருளை உருவாக்கம் செய்கின்ற போட்டிக் குழுமங்கள் தாங்கள் உருவாக்கம் செய்யும் பொருட்களை எப்பாடுபட்டாவது விற்பனைக்கு முகாமையாக இக் குழுமங்கள் விளம்பரங்களையே நம்பியிருக்கின்றன. இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனங்கள் தங்களது மொத்த விற்பனைத் தொகையில் இருபது விழுக்காட்டை விளம்பரங்களுக்காக மட்டுமே செலவிடுகின்றன என்றால் இதன் முகாமை என்ன என்பதை நாம் உணர இயலும்.

இங்கிருந்துதான் தொடங்குகின்றன விளம்பர வேடிக்கைகள். தங்களின் பொருட்களை விற்பதற்கு மக்களிடம் உள்ள பிற கலைப்பண்பாட்டு ஆசையையும், பழமைப்பிடிப்பையும் இவர்கள் முழுவதுமாகப் பயன்படுத்துகிறார்கள். இது மட்டுமன்று, திரைப்படமும், தாளிகைகளும், அரசும் வளர்த்து விட்டிருக்கும் அத்தனைச் சீரழிவுப் போக்குகளையும் மேலும் விசிறி விட்டு எரிய விடுகின்றன.

இவ் விளம்பரங்கள் ஆடம்பரங்களை அடிப்படைத் தேவைகளாக விளக்தப் படுத்துகின்றன? புதிது புதிதாய்ப் பொருட்களை வாங்கிக் குவிப்பதின் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சியைக் குவிப்பதாக நம்ப வைக்கின்றன.

விளம்பரங்கள் புதிய பல பொருட்களை வாங்குமாறு கோருவதோடு நிற்பதில்லை. ஏற்கனவே பயன்படுத்தும் பொருட்கள் பற்றிய நமது கண்ணோட்டத்தையே மாற்றுகின்றன. அவற்றிற்கும் நமக்கும் உள்ள உறவை மாற்றுகின்றன.

'சேசு' சவர்க்காரத் தூள் விளம்பரத்தில் வரும் குடும்பத் தலைவி ஒரு மூட்டைத் துணியைக் குவித்து வைத்துக் கொண்டு மிகவும் தொல்லைப் பட்டுத் துணிகளுக்கு சவர்க்காரம் போடுகிறாள்; வெயர்வை வழிகிறது; சோர்வடைகிறாள். உடனே தேவ தூதன் அனுப்பியதைப் போல வானத்திலே ஒரு சவர்க்காரத் தூள் பெட்டி வந்து நிற்கிறது. அதைத் தண்ணீரில் கலக்கி மூட்டைத் துணியையும் நனைக்கிறாள். 5 நிமையத்தில் வேலை முடிகிறது.

இது விளம்பரம். இதைத் தொடர்ந்து நான்கு முறை பார்க்கும் ஒரு பெண் அடுத்த நாள் துணிகளைத் துவைக்கும் போது சோர்வாக இருப்பதாக நினைக்கிறாள். அவ்வளவு தான். விளம்பரம் வெற்றி பெற்று விட்டது. பல ஆண்டுகளாய்ப் பயன் படுத்தி வரும் துணி சவர்க்காரம் தூர வீசப் படுகிறது. புதிய சவர்க்காரத் தூள் அதன் இடத்தைப் பிடித்துக் கொள்கிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது தவிர்க்க இயலாத முறைதான். இருந்தாலும் கழிதலும் புகுதலும், நம்முடைய அறிவு முழுமையான விருப்பத்திலிருந்தோ, நயன்மையான தேவையிலிருந்தோ வருவதில்லை. மாறாகப் புதியனவற்றை உருவாக்கம் செய்யும் முதலாளிகளின் விருப்பத்திற்கேற்ப வருகின்றன.

பசியில்லாமல் இருக்கும் போதே எதையாவது சாப்பிட்டால் என்ன என்ற உணர்வைத் தூண்டுபவைதாம் விளம்பரங்கள்.

—எத்தனை நேரம் பேருந்துக்காகக் காத்து நிற்பது? ...சின்னம் மெல்லுபசையை(சூயிங்கத்தை)மெல்லுங்கள். நேரம் போவதே தெரியாது. இப்படி ஒரு விளம்பரம். அதிக நேரம் மென்று கொண்டிருக்கலாம் என்பதே ஒரு தகுதியாகக் காட்டப் படுகிறது. பசியைத் தீர்க்கவோ, வேட்கையைத் தணிக்கவோ

ஒரு பொருளைச் சாப்பிடுவது என்பது இல்லை; நேரத்தைக் கொல்வதற்காக மெல்லுபசையை மெல்லுங்கள் என்கிறது விளம்பரம்.

புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்புகள் பொருளை உருவாக்கம் செய்வதற்கான நேரத்தைக் குறைக்கின்றன. தற்போது எல்லாத் துறைகளிலும் அறிமுகப் படுத்தப்படும் கணினிகள் மேலும் உருவாக்க நேரத்தைக் குறைக்கும். ஆனால் அவ்வாறு உருவாக்கம் செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தும் மக்களுக்கு என்ன அறிவுரை செய்யப் படுகிறது? நேரத்தைச் செலவிடுங்கள். தாறுமாறாக நேரத்தைச் செலவிடுங்கள்!

சமைக்க நேரம் அதிகமாகிறது; புதிய வளி அடுப்பில் சில நிமையங்களில் சமையலை முடியுங்கள். துணி துவைக்க நேரமாகிறது; சலவைப் பொறி வாங்கிக் கொள்ளும்படி எல்லா வசதிகளையும் செய்து கொள்ளுங்கள். அரைவைப் பொறி முதலிய எல்லா வசதிகளையும் செய்து கொள்ளுங்கள் சரி. மிச்சப்படும் நேரத்தை என்ன செய்வது? தொலைக்காட்சி முன்னால் உட்கார்ந்து எங்கள் விளம்பரங்களைப் பாருங்கள். மேலும் புதிய பொருள்களை அறிமுகப்படுத்துகிறோம், வாங்குங்கள், வாங்குங்கள், வாங்குங்கள்.

விளம்பரம் இல்லாமல் எந்தப் பொருளைத்தான் விற்க முடியும் என்று சிலர் நயன்மை பேசலாம்.

அன்றாடம் அரிசி, பருப்பு, எண்ணெய், உப்பு, காய்கறிகளை எந்த விளம்பரத்தைப் பார்த்தும் நாம் வாங்குவதில்லை.

முழம் வேட்டிக்கும் துண்டுக்கும் எந்தக் குழுமம் விளம்பரம் தருகிறது?

நாட்டில் 80 விழுக்காடு இருக்கும் உழவர்களும் அடிப்படை உழைப்பாளி மக்களுக்கும் உணவு, உடை, இருப்பிடம் போன்ற உயிர் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளுக்கே வழியில்லை. நகர்ப்புறத்திலிருக்கும் உதிரித் தொழிலாளிகளின் நிலையும் இது தான். அரிசியும் எண்ணெயும் அடிப்படைத் தேவைகளும் யாரும் விளம்பரம் செய்து வாங்குவதில்லை.

நகர்ப்புறத்து நடுத்தர வகுப்பினர், மேல்தட்டு நடுத்தர வகுப்பினர், மேட்டுக் குடி ஆலைத் தொழிலாளர்கள், சிற்றூர்ப் புறத்து நடுத்தர உழவர்கள், பணக்கார உழவர்கள் ஆகிய இவர்களை நோக்கித்தான் பெரும்பான்மை விளம்பரங்கள் குறிவைக்கப் படுகின்றன. அதே சமயம் மற்ற சிற்றூர்ப்புற உழவர்களையும் உழைப்பாளிகளையும் இவர்கள் விட்டு வைப்பதில்லை.

அவர்களையும், சென்று சேரும்படி விளம்பரம் செய்கிறார்கள்; திருவிழாக் காலங்களில் விளம்பரக் கடைகள், புனைவு வண்டிகள், மற்ற நேரங்களில் விளம்பரக் கண்ணாடிகள் திரைப் படங்கள் என்று பல வகைகளிலும் அவர்களிடமும் தங்கள்

பொருட்களை விளம்பரப் படுத்துகிறார்கள். இவற்றையெல்லாம் மிகக் கூர்மையாகத் திட்டமிடுகிறார்கள்.

இதைச் சொல்வதனால் வாழ்க்கையில் எவ்வகை முன்னேற்ற மும் இல்லாமல் சென்ற நூற்றாண்டின் வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பது பொருள் இல்லை. மாறாக, அடிப்படைத் தேவைகளுக்கான உருவாக்கம் திட்டமிட்டே புறக் கணிக்கப் படும்போது எவ்வகை நயன்மையும் இல்லாமல் ஆடம் பரப் பொருட்கள் உருவாக்கம் செய்து குவிக்கப் படுவதைத்தான் எதிர்க்கிறோம்.

ஆடம்பரப் பொருள் சந்தையில், வாடிக்கையாளர்களை பொருளின் பயன்பாடு, வாங்குபவரின் தேவை ஆகியவற்றைச் சொல்லி ஈர்ப்பதில்லை விளம்பரங்கள். உணர்வுகளைத் தூண்டித் தான் தங்கள் விற்பனையை விளைவிக்கின்றன விளம்பரங்கள்.

எல்லா விளம்பரங்களுமே குறிப்பிட்ட பொருள் அல்லது அதை உருவாக்கும் நிறுவனம் பற்றிய உயர்வான கருத்தை மக்கள் நடுவில் விதைக்கின்றன. நேர்த்திக்கு ஒரு நீண்ட மரபுத் தொடர்பு 'உசா' என்று விளம்பரம் செய்யப்படுகிறது. மின் விசிறிகள் மற்றும் தையல் எந்திரம் போன்ற பொருட்களை உரு வாக்கும் நிறுவனம். கேள்விக்கு இடமின்றி 'பிலிப்சு வானொலி கள்' என்கிறது இன்னொரு விளம்பரம். திரும்பத் திரும்ப இவ் விளம்பரங்களால் விளக்கப் படும் வாடிக்கையாளர்கள் ஒரு கருத் துக்கு வந்து விடுகிறார்கள். பின்னால், வாங்கிய பொருளில் ஏதாவது கோளாறு இருந்தால் கூட அது நாம் கையாள்வதில் ஏற்பட்ட கோளாறாக இருக்கும் என்று தனக்குத் தானே அமைவு சொல்லிக் கொள்ளுமளவு இந்த விளம்பரங்களினால் அடித்து வீழ்த்தப் படுகிறார்கள்.

ஒரு பொருளை வாங்க வேண்டும் என்ற கருத்து மக்களுக்குத் தானாக உருவாகுவதில்லை. அதை உருவாக்குகிறார்கள்.

அத்தகைய கருத்தை உருவாக்குவதற்குத்தான் பல உத்தி களைக் கையாள்கிறார்கள்.

சிக்கனம் பார்க்கும் வாடிக்கையாளர்களை வீழ்த்த மிகச் சுலபமான உத்தி 'இலவயம்' என பொருளை அறிவிப்பதுதான். ஒரு கண்ணாடிக் குவளைக்காக, வெள்ளிருப்புக் கரண்டிக்காக ஆசைப்பட்டு வழக்கமாக வாங்கும் சவர்க்காரத் தூளுக்குப் பகர மாக வேறு தூள் வாங்குபவர்கள் ஏராளம். புது நாகரீக வேட் கையில் எளிதாக விழுந்து தடுமாறும் நடுத்தர வகுப்பை விளம் பரக் குழுமங்கள் முட்டாளாக்கும் முறையே தனி. குளுமை யானது, சுருங்காது, பெருமையானது, காலை 9 மணி முதல் 5 மணி வரையிலான கடுமையான உழைப்பில் தாக்குப் பிடித்து நிற்பது 9 முதல் 5 மணி மாந்தர்களுக்காகவே வெகு சிறப்பாக உருவாக்கப் பட்டது என்று (மடிப்புக் கலையாத முழுக்கை

சட்டை, கால் சட்டையுடன் ஒரு ஆளையும் பிடித்துப் போட்டு)த் தனது துணி வகைகளுக்கு விளம்பரம் செய்கிறது 'மதுரா கோட்சு' என்ற நிறுவனம்.

வெறும் நடுத்தர வகுப்பினர் மட்டுமல்லர்; அதிகாரிகள் முதல் நடுத்தர வகுப்பு எழுத்தர் வரை உரு. 10000 சம்பளம் முதல் 500 வரை பல தரத்தார்கள் அதில் உண்டு. ஆனால் இவ் விளம்பரம் நடுத்தர வகுப்பு முழுவதையுமே குறிவைக்கிறது. பெருமை என்ற உணர்வினால் உந்தப்பட்டவர்கள் மதுரை கோட்சின் விளம்பரக் கயிற்றில் சிக்குகிறார்கள். கோடைக்கு ஏற்றது. குளிர்காலத்திற்கு ஏற்றது என்று பல்வேறு சவுளி நிறுவனங்கள் செய்யும் விளம்பரங்கள் இவ்வகைகளைச் சேர்ந்தவைதாம். இந்தத் தரத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் தாங்கள் அணிந்து செல்லும் கடிகாரங்களைப் பயன்படுத்தும் பொருட்களை நண்பர்கள், உறவினர்கள் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்ற நோய் பிடித்தவர்களாக உள்ளனர்.

என் மேனியெழிலைப் பாதுகாக்க நான் 'லக்சு' வழலையைத் தான் பயன் படுத்துகிறேன் என்று 30 ஆண்டுகளாகப் பல்வேறு திரைப்பட நடிகைகள் (300 பேர்) திரையிலும், தாளிகைகளிலும் சொல்லிய வண்ணம் இருக்கிறார்கள். இதை நம்பி ஏராளமான கீழ்த் தட்டு நடுத்தர வகுப்பு மற்றும் பொதுவான நகர்ப்புற உழைப்பாளிகளின் குடும்பங்கள் 'லக்சு' வழலையைப் பயன்படுத்துகின்றன.

இனக் கவர்ச்சியைப் பயன் படுத்தித் தங்கள் விற்பனையைக் கூட்டிக் கொள்ளும் விலைமகள் தன்மையைத்தான் பெரும்பான்மை விளம்பரங்கள் செய்கின்றன. 'பாம்பே டையிங்' துணி அணிந்த ஆண் மகனை ஈக்களைப் போல் பெண்கள் மொய்க்கின்றனர். 'தினேசு சூட்டிங்' அணிந்த கையில் ஒரு கோப்பை மதுவுடன் நிற்கும் மட்டைப்பந்து ஆட்டக்காரர் கவாசுகர் அருகில் அவரது பெருமிதத்தில் மனத்தைப் பறிகொடுத்து அரை அம்மணமாக அருகில் நிற்கும் ஒரு பெண். 'ஆல்வின்' கடிகாரம் கட்டிய இளம் பெண்களின் கும்பலுக்குப் பின்னால் நாயாய் அலையும் இளைஞர்கள். 'பாம்பே டையிங்' உடைகளணிந்த பெண்ணின் அருகில் மயங்கிப் போக்குவரத்தைக் கூடக் கவனிக்காமல் அடிபட்டுக் கட்டுப் போட்டுக் கொண்டு அப்புறமும் அப்பெண்ணைத் தேடி அலையும் ஒரு பொறுக்கி. இவையெல்லாம் தாங்கள் விளம்பரப்படுத்தும் துணிகளின் தரத்தைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. முழுக்க முழுக்க பாலுணர்வு வெறியைத் தூண்டி விட்டுத் தங்கள் பொருள்களுக்கு விளம்பரம் தேடுகின்றன.

விளம்பர நிறுவனங்களுக்கு குமுகாயப் பொறுப்புணர்வு எள்ளளவும் கிடையாது என்பதற்கு சான்று தேடி அலைய வேண்டியதில்லை. புகை பிடிப்பது போன்ற பழக்கங்களை ஆண்மை மிக்கவர்கள் மட்டுமே செய்யக் கூடியவையாகக் காட்டுகின்றன விளம்பரங்கள்.

கொந்தளிக்கும் கடலிலே தனியாகப் பாய் மரப் படகை செலுத்துகிறான் 'வில்சு' வெண்சுருட்டுப்(சிகரெட்) பிடிக்கும் 'வீரன்' வானூர்தி ஓட்டி(விமானி)'பனாமா' சிகரெட் பிடிக்கிறார். 'சார்மினார்' பிடிக்கும் இளைஞன் கட்டுக்கோப்பான உறுதி வாய்ந்த உடலுடன் தோன்றுகிறான்.

குடும்ப உறவுகளையும் தங்கள் விற்பனைக்குத் துணையாகப் பயன் படுத்தத் தவறுவதில்லை இவர்கள். உங்கள் குழந்தைக்கு நாள் முழுதும் ஆற்றல் அளிக்க பூசுட், ஆர்லிக்சு, உங்கள் சிறிய மகளுக்கு பி. எசு. ஏ. யில் குழந்தைகளுக்கான மிதிவண்டி, உங்கள் மனைவிக்குப் புடவை என்று பல கோணங்களில் அப்பனாக மகனாக, தாயாக, தங்கையாக ஏதாவது ஒரு வகையில் வாங்கு வாங்கு-என்று கூச்சலிடுகின்றன விளம்பரங்கள்.

விளம்பரங்கள் புராணங்களையும் கட்டுக் கதைகளையும் புதிய வடிவங்களில் உலவவிட்டு நம்மை மயக்குகின்றன. இளைஞர்கள் முதல் முதியவர்கள்வரை அனைவரையும் சிந்தனையில் சிறுவர்களாக்கி விடுகின்றன. வெறும் உருவங்களையும் காட்சிகளையும் காட்டி மயக்குகின்றன. அவை தருக்க முறையான சிந்தனைக்கு ஒவ்வாதவை.

விளம்பரங்கள் நீங்கள் வைத்திருக்கும் பொருள்களின் மூலம் தான் உங்கள் குமுக மதிப்புத் தீர்மானிக்கப் படுகிறது என்பதைத் திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்கின்றன.

அவர்கள் சொல்கின்ற பொருள்களை வாங்குவதற்கு நீங்கள் செய்யும் செலவினங்கள் வீரச் செயல்களாக விளக்கம் செய்து காட்டப் படுகின்றன.

பொருளின் தரம் அன்று, அ'து அடைக்கப் பட்டிருக்கும் பெட்டியின் அழகு; பொருளின் விலை அன்று, அதை வைத்திருப்பதால் நீங்கள் அடையப் போகும் குமுக மதிப்பு; புதிய பொருளின் தேவை அன்று, பழைய பொருள்களின் மீது உங்களுக்கு ஏற்படுத்தப் படும் சலிப்பு. விளம்பர வெற்றியின் கருப்பொருள் இதுதான்.

உடல் நலத்திற்குக் கேடு பயக்கும் செய்திகளைத் துணிந்து விற்பனை செய்கின்றனர். இதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்:

பொங்கும் நுரைவளம் என்று விளம்பரம் செய்யும் வெளுப்புச் சவர்க்காரம், சவர்க்காரத் தூள் உருவாக்கும் நிறுவனங்கள் நுரைதான் துணியை வெளுக்கக் கூடிய பொருள் என்பதைப் போன்ற மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் நுரைக்கும் அழுக்கை அகற்றும் திறனுக்கும் எவ்வித உறவும் கிடையாது. அத்துடன் நுரைவளம் பயன் படுத்தும் தண்ணீரின் கடினத் தன்மையைப் பொறுத்துக் குறைகிறது. அதே போல தலையிலுள்ள அழுக்கை அகற்றும் சாம்பூக்களில் பொங்கி வரும்

நுரைக்கும் அழுக்கை எடுக்கும் திறனுக்கும் எள்ளளவு தொடர்பும் கிடையாது.

நுண்ணுயிர்க் கொல்லி(Germicidal) மருந்து வழலைகள், உடல் தீநாற்றத்தை நீக்கும் (Deodorant)-வழலைக் கட்டிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவது உடல் நலத்திற்குத் தீங்கு பயக்கும் என்று மருத்துவத் திறவோர்கள் கூறுகின்றார்கள். மேலும் மேனிக்கு மெருகூட்டுபவை என்று செய்யப்படும் விளம்பரங்களும் கலப்படமில்லாத பித்தலாட்டங்களே.

பற்பசை, பற்பொடி விளம்பரங்கள், ஏமாற்றுகளில் முன்னிற்பவை. பற்பசையைப் பயன் படுத்திய உடனே வாய் தீநாற்றம் போய் விடுவதாக விளம்பரங்கள் சொல்வதனைத்தும் பொய். வாயில் தங்கியிருக்கும் உணவுத் துகள்கள் மட்டும் வாய் தீ நாற்றத்திற்குக் காரணமானவை அல்ல. முறையாகப் பல் துலக்கும் யாருக்கும் இச் சிக்கல் தோன்றப் போவதில்லை. ஆனால் வயிற்றுக் கோளாறுகளால் அதிகமாகத் தோன்றும் வாய் தீ நாற்றத்தைப் பற்பசை எப்படிப் போக்க முடியும்? இதில் 'ப்ளூரைடு' கலந்திருப்பதால் என்று பற்பசை விளம்பரங்கள் ஏதோ உலகில் கிடைக்காத அரிய பொருளைத் தங்கள் பற்பசையில் கலந்துள்ளதாக தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. ஆனால் ப்ளூரைடு என்ற இந்தப் பொருளால் பற்களுக்கு என்ன பயன் என்பது ஒன்றும் புரியவில்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.

இப்படிப் பொய் சொல்வதுடன் மட்டும் நிறுத்திக் கொள்வதில்லை பற்பசை உருவாக்க நிறுவனங்கள். தங்கள் பற்பசையில் 'மெந்தால்' எனும் வேதியல் பொருளைக் கலக்கின்றனர். அதனால் ஏற்படும் 'சில்'லென்ற உணர்வைப் புத்துணர்ச்சி என விளக்குகின்றனர். ஆனால் மெந்தால் கலந்த பொருளைத் தொடர்ந்து பயன் படுத்துபவர்கள் பற்பசைக்கு அடிமையாகி விடுவர். இது கலக்கப் படாத பற்பசைகளே பெரும்பாலும் இல்லை எனக் கூறி விடலாம்.

குசராத்தின் நாதியா நகரிலுள்ள ஆசா இன்டசுட்ரீசு, பராக் இன்டசுட்ரீசு போன்ற நிறுவனங்கள் உருவாக்கிய பற்பசையை வாங்கிப் பயன்படுத்திய வாடிக்கையாளர் ஒருவர் தன் மனைவி ஒரே நாளில் சாப்பிட்டுத் தீர்த்து விடுவதைக்கண்டு அச்சமடைந்து மருத்துவர் கருத்துக்குச் சென்றார். அந்தப் பற்பசையில் புகையிலையை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் கலந்திருப்பது ஆய்வில் கண்டு பிடிக்கப் பட்டது. அந் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார் அந்த வாடிக்கையாளர்.

இவ்வாறு வெறியப் பொருள்களையும், பழக்கத்திற்கு அடிமையாக்கும் வேதியல் பொருள்களையும் பற்பசையில் மட்டும் கலப்பதில்லை. இப்போது மிக அதிகமாக விற்பனையாகும் லிம்கா, தம்ப்சுஅப், கோல்ட்சுபாட் மற்றும் பல்வேறு குடிப்புகளில் இத்

தகைய வெறியூட்டும் பொருள்களையும் இனிப்புச் சுவையையும் தவிர வேறெதுவும் கிடையாது. குறிப்பாக 'பார்லே' நிறுவனம் உருவாக்கும் 'தம்ப்சு அப்' என்ற குடிப்பில், கழித்து ஒதுக்கப் படும் தேநீர்த் தூளிலிருந்து எடுக்கப்படும் காஃபின் என்ற வேதியல் பொருள் கலக்கப்படுகின்றது.

சிற்றூர்ப்புறக் கோயில் திருவிழாக்களில் பல வண்ணங்களில் 20 காசுக்கு விற்பனையாகும் குளிர்க் குடிப்புகளினால் உடலுக்கு நேரக்கூடிய தீங்கைவிடப் புட்டியில் அடைக்கப் பட்ட இந்த உயர் தரக் குடிப்புகளினால் உடலுக்கு விளையும் தீங்கு எவ்வகையிலும் குறைந்ததன்று. இவற்றின் விற்பனைக்காகக் கையாளும் போலி யான விளம்பரங்களைப் பற்றி விளக்கத் தேவையில்லை. இந்த விளம்பரங்களினால் உருவாக்கப் படும் இப்பழக்கம் நீர்விடாயைத் தணிக்கும் தேவையன்று. மாறாக இதுவே ஒரு மேலை நாட்டுக் கலையொழுக்கம்.

இவற்றுடன் கூடவே ஊக்கம் தரவல்லது என்றும் 'குளுகோசு' அடங்கிய குடிப்புகள் என்றும் விளம்பரம் செய்யப்படும் 'பிரிசுக்', 'ரசனா', 'குளுகான்', 'எலக்ச்ரோசு' போன்ற அனைத்துமே ஏமாற்று வேலைகள். இழந்து போன ஆற்றலை மீட்டு எடுக்கத் தொடர்ந்து குளுகோசு அருந்துவது, ஏதமானது. ஊட்டச்சாரக் குறைவி னால் வரும் சோர்வுக்கு 'குளுகோசு' மாற்று அன்று. மாறாக இது சர்க்கரை நோய், குருதி அழுத்தம், நெப்லரிபுசு(!) போன்ற நோய் -களை அதிகமாக்கும். விளம்பரங்கள் சளி, மூக்கடைப்பிற்கும் உடனடித் தீர்வு எனப் பல வகையாக மருந்துகள் விளம்பரம் செய்கின்றன, வெளிநாட்டு நிறுவனங்கள். ஆனால் ஆங்கில மருந்துகளில் நலம் (Cure) இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை என்பதே உண்மை. 'சொல் வருணனைகளில் ஒளிந்து கொண்டு நாங்கள் நோயைத் தீர்க்க முடியும் என்று சொல்வதில்லை; ஒரு தற்காலிக நீக்கம் என்றுதான் விளம்பரம் செய்கிறோம்' என்று கூறுகின்றன இந்நிறுவனங்கள். அதிகமாகச் சார(வைட்டமின்) மாத்திரைகளைச் சாப்பிடுவது சிறுநீரகக் குழாயில் தொற்று நோய்களை ஏற்படுத்தும் என்ற மருத்துவ எச்சரிக்கை இருக்கும் போதே, அதைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு இப்படி நேரடியாக விளம்பரம் செய்து மருந்துப் பொருட்களைச் சுவையன் (மிட்டாய்)களைப் போல விற்கின்றன மருந்துக் குழுமங்கள்.

வாடிக்கையாளர்கள் முட்டாள்கள் என்று முடிவு செய்து கொண்டு தங்கள் விளம்பரங்களை இவர்கள் வடிவமைக்கின்றனர். எனவே 21 வகை மூலிகைகலந்திருக்கிறது. 'சிந்தால்' வழலையில் G-11 இருக்கிறது, 'ஆக்சன்' 600, 'பார்முலா'-44 என்று பலவகை யாகப் புரியாத வகையில் திகைப்பூட்டும் சொற்றொடர்களை வைத்துத் தங்கள் பொருட்களை விளம்பரம் செய்கிறார்கள். அந்த மருமமான வியப்புப் பொருளின் ஆற்றல் என்ன என்பதைப் பற்றி ஒரு சொல்கூட மூச்சு விடுவதில்லை.

விளம்பரங்களில் நடக்கும் பித்தலாட்டத்திற்கு ஓர் எல்லையே இல்லை. அகவை முதிர்ந்தால் உடலியல் காரணங்களினால் முடி உதிர்ந்து வழுக்கை விழுகிறது. 'அதற்குத் தலையில் எங்கள் எண்ணெயைப் பூசிக் கொண்டால் முடி முளைக்கும்' என்று அப்பட்டமாக ஊரறிந்த பொய்யை விளம்பரமாக்கித் தங்கள் சரக்குகளை விற்றும் விடுகின்றனர்.

இதுமட்டுமன்று, 'பிலிப்சு' 'உசா', போன்ற பெரும் பெயர் மிக்க பரவலாகத் தெரிந்த நிறுவனங்கள் கடுமையான தரக்கட்டுப்பாட்டின்கீழ் உருவாக்குவதாகச் சொல்லும் சொல்லிலும், அவர்களின் பொருட்கள் நாட்டின் பல்வேறு மூலைகளில் குடிசைத் தொழில் நிலையங்களில் உருவாக்கப்பட்டு, இவர்களது முத்திரை மட்டும் போடப்பட்டு விற்கப்படுகிறதென்கிற செய்தி தற்போது வெளிவந்துள்ளது.

டெல்லியில் பிலிப்சு நிறுவனத்தின் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்கி ஏமாறிய சவிதா கோஃலி என்ற பெண் செய்தியாளர் ஒருவர் அந்நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார்.

பொருட்களின் விலையை ஏற்றிவிட்டு இலவயம், தள்ளுபடி என்று விளம்பரம் செய்ததற்காக V.I.P. சூட்கேசுகள் உருவாக்கும் 'ப்ளோ பிளாசுட்' நிறுவனத்தினர் மீதும் 'கைதான்' மின்விசிறிக் குழுமத்தின் மீதும் வழக்குகள் தொடர்ந்துள்ளனர் இரண்டு பேர்.

சிறிதளவு தயக்கம் கூடக் காட்டாமல் வெளிப்படையாக மக்களை ஏமாற்றுச் செய்யும் இவர்கள்தாம் பொறுப்பு வாய்ந்த தொழிலதிபர்கள் என்று விளக்கப்படுத்தப் படுகிறார்கள். மூன்று சீட்டுக்காரனும் நாடா குத்துபவனும் செய்யும் அதே வேலையைக் குப்பாயம் கால்சட்டை போட்டுக் கொண்டு செய்யும் இவர்கள் பெரிய வெளிநாட்டு நிறுவனக்காரர்கள்.

இவ்விளம்பரங்கள் உடலுக்கு இழைக்கும் தீங்கை விட உள்ளத்திற்கு இழைக்கும் தீங்கு அதிகமானது. இவ்விளம்பரங்கள் வெறும் பொருள் விற்பனை விளம்பரங்கள் அல்ல. மாறாக அவை ஒரு கலைப்பண்பாட்டைப் பரப்புதல் செய்கின்றன. வெளிநாட்டுச் சீரழிவுக் கலை நடைமுறைகளை இவ்விளம்பரங்களை அம்பலப்படுத்துவது சீரழிவுக் கலைமுறையை எதிர்த்த போராட்டத்தின் ஒரு பகுதி. —நன்றி 'புதிய கலாச்சாரம்' ஆகத்து '86.

○ அமேசான் பச்சைக்கல் (Amazon Emerald) (அண்மையில் வெளிவந்த Emerald Forest-என்ற படத்தில் காட்டப் பெற்ற கல்) நீலமலையிலிருந்தே கொண்டு செல்லப் பெற்றது.

○ மொகஞ்சதாரோவில் கிடைத்த மண்பாண்டங்கள் மீது சிவன் வடிவம் தென்படுகின்றது.

படிப்பதெல்லாம் எதற்காக ?

பறம்பை அறிவன்.

'ஆண்டின் ஒரு மாந்தன்' எனத் தி வீக் என்ற ஆங்கில இதழ், 'பகத் பூரன்சிங்' என்பவரை அறிமுகம் செய்கிறது. போராடும் மாந்தரை மறைத்து, மாந்த நேயம் என்ற பெயரில் கொடுமைகளுக்குத் திரையிடும் சீர்திருத்த நடவடிக்கையை உயர்த்திப் பிடிக்கின்றது. பஞ்சாப் விளைவுகள் நாம் ஆராயும் போது, இத்தகைய சீர்த்திருத்திகள் குறுக்கிடுவது இயல்பே. இதனை விட்டு விலகி ஓடுவது மார்க்சிய ஆய்வுமுறைக்கு இழுக்கே ஆகும். முழுமைக்கான போராட்டம் மார்க்சியத்தின் உள்ளடக்கமாக அமைந்திருக்கும். அதேவேளை, வளர்ச்சியின் முன்னேற்றத்தின் தளிர்களுக்காகவே பாடுபடும். சாரத்தின் சாரமாக மார்க்சியம் உள்வீறு கொண்டு உயர்ந்தெழுகின்றது.

அரசு, மக்களைக் காக்கப் புறப்பட்டுப் பின்னர் ஒடுக்கும் கருவியாக மாறிவிடுகின்றது. பாதுகாப்புக்காக உருவான ஓட்டை வளர்ச்சி பெற்ற மக்கள் போராடி உடைப்பது தவிர்க்க முடியாததாகும். அது போல அரசை எதிர்த்துக் தகர்த்திட வேண்டிய கட்டாயம் மக்களுக்கு வந்துவிடுகிறது. அதற்கான புதிய அரசுக்கான உள்ளமைப்பு மக்களிடையே தோன்றிவரும். அவை, புரட்சிகரக் குழுக்களாகவும், கட்சியாகவும் வடிவம் பெறும்.

தமிழ் நாட்டில் 'இந்தி எதிர்ப்புப் போர்' தி. மு. க. வின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்குவோம். இப் போராட்டத் தி.மு.க. பற்றிய திறனாய்வுகள் பலவாறு, பலதரப்புகளிலிருந்து தோன்றியுள்ளன.

தி. மு. க. அழிந்துபடும்—

அ.இ.அ.தி.மு.க. அதன் தலைமையோடு முடிந்துவிடும்.

பேராயக் கட்சிக்கு எப்போதும் தமிழ் நாட்டில் இனி இடமில்லை.

பொதுவுடைமைக் கட்சிகள் மேல் மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியக் கொள்கை வலுப் பெறும். புதிய கட்சிக்கான அடிப்படை தோன்றும்.

இப்படிப்பட்ட கருத்துகளை நாம் தொகுத்துணர்ந்து நோக்கும் போது கீழ்க்காணும் உண்மை வெளிப்படும்!

''இன்றைய ஆளும் வகுப்பிற்கு அடிமேல் அடி.

அது தன்னைக் காத்துக் கொள்ள படை, அதிகாரம் கொண்டு நயன்மை, பண்பாடு, கலைத்தளங்களின் விரிசல்களைப் பூசி மெழுகிக் கொண்டிருக்கிறது.

ஆனால், விரிசலும் வெடிப்பும் சூழப்படுகின்ற அடையாளங்கள் ஊமைத்தனத்தால் அமைதித் தோற்றம் கொண்டிருந்தாலும், ஒரு கொடுமை நிலையை உள்ளடக்கிக் கொண்டிருப்பது உறுதியானதாகும்.

மார்க்சிய நெறி முறைகளை 'அமைப்புக்குள்ளேயே' தேடியலைகின்றனர். வெறுங்கூடாகிப் போன மாத்திரைகள் அவை; காலியான கூடாரங்கள்; மெய்ம்ம(தத்துவ) வறுமைப் பட்டவை என்பதையும் நாம் அறிதல் வேண்டும்?!

தில்லி மாநகரில் 25, 26, 27-1-87-ஆம் நாள்களில் 'ஆவினக் கொலைத் தடுப்பு இயக்கம்' அமைதியான முறையில் வழிபாடு நடத்தியது. அரசிற்கும், அதன் உறுப்புகளான சட்டமன்றப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வேண்டுகோள்(விண்ணப்பம்) விடுத்துள்ளது. இதற்குப் 'பேராயக் கட்சி' ஆதரவு தருகிறது. இந்த ஏற்பாட்டுக்குள் உள்ள அரசின் இரட்டைக் கோலம் பற்றி நாம் எச்சரிக்கை கொள்ளுதல் வேண்டும்.

'நிகழ்ச்சிகளின் மூலவிசை'யாகவுள்ள வகுப்புப் போராட்டத்தைக் கண்டறியும் போதே மேற்கண்ட நிகழ்ச்சியுள் காணும் 'வகுப்புச் சார்பை' உணர்தல் இயலும்!

21-ஆம் நூற்றாண்டை 17-ஆம் நூற்றாண்டில் வாழும் இந்திய மக்களிடம் திணிக்க முயல்கின்ற இந்திய ஆளும் தரகு முதலாளி வகுப்பு, 'கால்நடை வளர்ப்புப் பற்றியும், பாதுகாப்புப் பற்றியும்' என்ன கருத்துக் கொண்டிருக்கிறது எனக் கண்டறிதல் 'அரியது' ஆகாது. அதன் உள்நோக்கம் அதன் நடைமுறையிலேயே அம்பலப் பட்டிருப்பதை அறியுங்கள்; அறிவோம்!

அயலகத் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்து உள்நாட்டுத் தேசிய விளைவுகளை அழிவுக்குள்ளாக்கும். நம் நாட்டில் 'கால்நடைகளின்' பாதுகாப்பு எப்படித் தாக்கமுறுகிறது என அறிவோம். எடுத்துக்காட்டாக மேல்நாட்டு உரஉப்புகள் மூலம் வேளாண்மை விளைச்சல் பெருகினாலும், நெல்தாள்கள் சாரமற்றவையாக உள்ளன. கால்நடைத் தீவனம் இதன் மூலம் குறைகின்றது. கால்நடைகளை வளர்ப்பது கடின வாழ்க்கையாகிப் போன உழவர்கள் உழவு மாடுகளையே விற்கும் அவலத்திற்கு ஆளாகி விடுகின்றார்கள்.

இந்நிலையில், தீவனங்களை விலைபோட்டு வாங்கி ஆவினங்களை வளர்ப்பது உழவர்க்கு இயலாத ஒன்றே. பாலின் பொருட்டு நடுத்தர, மேல்தட்டு, நகரமக்களுக்காகப் பால்பண்ணை அமைத்து வணிகத்தில் ஈடுபடும் ஒருபிரிவு அரசினால் அக்கறையோடு உருவாக்கப்பட்டுவருவதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். பாலை, அமிழ்தம் என்றும்,-சாரமுள்ள உணவென்றும் விளம்பரம் செய்தாலும், பால் உழவர்களுக்குக் கிடைக்க அரிய 'அமிழ்தம்' ஆகிவிட்டதென்னவோ உண்மைதான்.

ஆவினை - பசுவை - க் காட்டி 'இந்து' சமய வுணர்ச்சியைத் தூண்டுவது ஏன்? பால் இசுலாமியர்க்கு விருப்பமில்லாத உணவு ஆகாது. ஆயினும், இந்தியாவில், மாட்டிறைச்சி, தோல் பதனிடுதல் தொழிலில் பெரும்பான்மையாக ஈடுபட்டுள்ள மக்களில் முசுலீம்கள் அதிகம் என்பதால் இந்த ஆக் கொலை(பசுவதை)த் தடுப்பு இயக்கம் தோன்றியது என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கதே ஆகும்!

கால்நடை வளர்ச்சிக்கான துறைகள், ஆவினம், காளை, ஆடுகள், எருமைகள் பற்றியும் அக்கறையோடு செயல்படும் போது, இந்தத் தடுப்பு இயக்கங்கள் ஏன்?

ஆடு, மாடுகளை விட மிக இழிவாகிப் போன மக்களையும், அவர்களின் வாழ்க்கையையும் பாதுகாப்பையும் தேடி நாம் என்ன செய்யப் போகின்றோம்? 'வழிபாடும் ஆண்டவனிடம் செய்யும் முறையீடும்' எச் சிக்கலையும் தீர்க்கப் போவதுண்டோ?

இந்தியாவில், 'இந்து' எனப்படுகின்றவரை விடத் தமிழரின் சைவ நெறியொன்றே உயிர்க் கொலையை-புலால் உண்ணுதலை மறுத்திருப்பதும்-சமணர் நெறி இந்து நெறிக் கெதிராக நின்றிருப்பதும் பற்றி நாம் இங்கே எண்ணிப் பார்த்திடுதல் வேண்டும். ஆவினம் காத்தல், கரந்தை மீட்சி முதலிய வாழ்க்கைப் பாடுகள் தமிழர்க்குரியனவாக இருந்தன.

பொதுவான இந்திய வரலாற்றுக் குறிப்பில் 'இந்து' மத வளர்ச்சி என்பது தேசிய இனங்களின் ஒடுக்குதலில் முடிந்துள்ளது. எனவே, 'ஆவினப் படுகொலை எதிர்ப்பெல்லாம்' தேசிய இன எதிர்ப்பில் முடிவதற்குக் காரணமாகி விடும்; அல்லது, அதன் முற்றமுழு எதிரியாக முசுலீம்களை-ஓரிறைக் கொள்கையை-உருவாக்கிப் பின்னர் - 'ஓரிந்திய' 'ஒரே நாடு' என்ற மெய்ம்ம(தத்துவ)த்தை வளர்த்திடக் கூடும்!

போராட்டங்களுக்குள் 'எதிரி'யின் ஊடுருவலை நாம் புரிந்து கொள்ள நாம் வகுப்புப் போராட்ட ஆய்வு முறையினை மேற்கொள்ளுதல் வேண்டும்! ○

○ பண்டைத் தமிழகத்தில் அரண்மனையில் பணிகள் செய்யும் பெண்களே பெண்டாட்டி என்னும் சொல்லால் அழைக்கப் பெற்றனர். இப்பொழுது இச்சொல் மனைவியைக் குறிக்கிறது.

○ பண்டைத் தமிழர்களுக்கு ஆண்டுக் கணக்கு தை மாதத்திலிருந்தே தொடங்கியது. சிந்து வெளி நாகரிகத்திலும் ஆண்டுக் கணக்கு தை மாதத்திலிருந்தே தொடங்கியது.

○ சிந்து வெளி மக்கள் கி.மு. 5610-இலேயே ஓரை(இராசி) மண்டிலத்தை அறிந்திருந்தனர்.

ஏனெனில் நான் பார்க்கும் நிலையை நான் கூறுவதில் தவறில்லை-தானே.

குறிப்பாகத் தமிழாசிரியர் பணியைப் பார்க்கும் பல பத்தாம் பசலிகளைத்தான் கூறவேண்டும். (உண்மை உணர்வுள்ள தமிழாசானின் மனம் என்னை மன்னிக்கட்டும்). நான் பணியாற்றிய நான்கு உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்றிலேனும் முழுமையான உணர்வு கொண்ட தமிழாசிரியர்களைக் காண இயலவில்லை; ஒரு பள்ளியில் மட்டும் ஓர் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றிய திரு. அ. பொன்னையன் என்ற அருமை நண்பர்(தற்பொழுது தமிழாசான்) மட்டும் தமிழ்ப் பற்றுடையவராக விளங்கினார். அன்னார் போன்று தமிழ் ஆசிரியர்கள் இருப்பின் தங்களைப் போன்று உழைக்கும் உள்ளத்திற்கு ஊக்கமளிக்கும். மாதா மாதம் பெறும் பணத்தின் மடங்கைப் பெருக்க வேண்டிய ஒரு நோக்கம் மட்டுமே கொன்ட இடைநிலை, சிறப்பாசிரியர்களுக்குத் தமிழாசிரியர் பதவி உயர்வு கண்மூடித்தனமாகப் பணிக் காலம் ஒன்று மட்டுமே தகுதியாகக் கொண்டு அளிக்கப் படுவதால் அதிலும் அவ்வாறு பதவி உயர்வு பெறுவோர் ஒரே தமிழாசிரியர் தாம் அப் பள்ளிக்கு என்ற நிலைமை வந்து அதுவும் அவரே அப்பள்ளியில் பல ஆண்டுகள் கழிக்க நேரும்பொழுது, அப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் பற்றிய அடிப்படைக் கருத்துக்கூட தெரியா நிலையில் இருப்பதில் வியப்பென்ன? சில முரண்பட்ட நெறிமுறைகளை வைத்துக் கொண்டு தமிழாசிரியர் பதவி உயர்வு அளிப்பதே தமிழினத்தை அழிவு நிலைக்கு கொண்டு வரும் ஒரு சரியான கொலைக் கருவி என்பது என் கருத்தாகும்.

—ஓவியர். அ. மோகன், க.மு., கல்.இ., எடுத்தனூர்.

○: *1202:* அன்பு நிறைந்த அய்யா! வணக்கம்! சுவடி 22 ஓலை 12 'தென்மொழி'யின் ஆசிரிய உரையில் தமிழகத்தில் நடைபெறும் உண்மை நிலையை யாவரும் விளங்கும் வண்ணம் சிறப்பாக விளக்கியுள்ளீர்கள். மிகவும் சிறப்பாகவும், நடுநிலையோடும் தாங்கள் கண்ட கணிப்பு போற்றுதற்குரியது. தேவையற்ற போராட்டமும், பழி வாங்கும் பதவிப்பறிப்பும் நாட்டை மேலும் அடிமைப்படுத்தும் வழிகளே தவிர விடுதலை நோக்கன்று. எத்தனைப் போராட்டம் கலைஞர்போல, நாமும் கண்டாலும் நடுவணரசு இந்தி புகுத்தல் வேலையைக் கைவிடாது. இதற்கு தனி நாட்டு விடுதலையே முடிவு தரும்! தங்கள் உண்மைத் தொண்டன், பாவலர் தாழை. ந. இளவழகன், மணவை.

○: *1203:* அன்புசால் பெருந்தகையீருக்கு வணக்கம்! அய்யா, தங்களை 25 - ஆண்டுகளாக நெஞ்சாரப் போற்றிவருபவன். தாங்கள் எவ்வகை இடையூறுமில்லாமல் இன்னும் நூறாண்டுகள் தனித்தமிழ்ப் பணியாற்ற வேண்டும்! பல கனிச்சாறு தரவேண்டும் என்று இறைஞ்சுபவன். எவரோ சிலர் தங்களை ஏசுவதை வைத்து எள்ளளவும் தங்களை வெறுக்காதவன். அப்படியிருப்பதால் ஈரோட்டிலிருந்து ஓர் இதழாசிரியர் என்னையும் சாடத் தொடங்கியுள்ளார். தமிழால் வாழும் தறுதலைகள் தமிழுக்காக வாழும் தகைமையாளர்களைச் சாடித் தம் வயிறு கழுவப்பார்க்கிறதுகள்! இவர் இதழ்களை இவரே விடுத்து வைத்துக் கட்டணம் வரவில்லை என்று பொருமுகிறார். இவரை இவ்வினையாற்றச் சொல்லி யார் வேண்டினார்கள்?

குற்றமற்றவர்களையும் குற்றவாளியாக்கிக் குறைகூறும் இவர் எழுத்துகளை விலை கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டுமாம்! இவர் இப்படி எழுதுவதுதான் தமிழ்ப் பணியாம்! என் போன்றவர்களுக்கு ஏதோ அரசு ஊதியம் தருவதைப் போலவும் நாளைக்குக் குறை கண்டு அதை நிறுத்திவிடுவது போலவும் இவர்

என்னைப் பற்றியும் எழுதுவாராம்—மடல் விடுத்துள்ளார்! இவருக்குத்தான் வேறு வேலையே இல்லை. நமக்குமா வேலை யில்லை; நாம் நம் வழியில் செல்வோம்-வெல்வோம்! அன்புள்ள,

—க. அ. ஒளியவன், (பிரகாசம்), கொடுமுடி.

ஓ: *1204:* என் அரும்பெறல் ஆசிரியரீர், வணக்கம். 'தென் மொழி' வந்தது. செந்துவின் மடல் படிக்கப் படிக்க இனித்தது. அதில் விரவி வந்த கருத்துகள் நயம்பட உள்ளன. படித்துப் படித்து மகிழ்ந்தேன். வீட்டில் அனைவரும் படித்துச் சுவைத்துச் சிரித்தனர். செந்துவின் நடையில் தங்களின் உரைநடையே இருந்தது. தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் நடை யளவு நயம் அதில் முழுமையாக ஒளிர்ந்தது. அவருக்கு என் வாழ்த்துகள்.

''இனநலம் ஏமாப்பு உடைத்து'' ஆசிரியவுரை நன்று. திருவள்ளுவர்தாம் தங்கள் வடிவில் இத் தமிழ்நிலம் உய்ய-மீள இந் நூற்றுண்டில் பிறந்திருக்கின்றுர். திருக்குறள் தொடர்பில் நம் இனநலக் காப்புக்காக இக் கருத்தை உடனடியாகப் பரப்பு தல் வேண்டும்; தங்களை நான் திருவள்ளுவப் பேராசானகப் பார்க்கிறேன். இப்படிக்கு அன்றும் இன்றும் என்றும் தங்கள் மாணவன்,

—இளஞ்சித்திரன், சென்னை—*48*.

ஓ: *1205:* பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்க ளுக்கு வணக்கம். தென்மொழி சுவடி *23*, ஓலை-*1* இதழ் கொண்ட கருத்துச் சிந்தனைகளைச் சிந்திக்கும் நோக்கோடு படித்துணர்ந்தேன். ஆசிரிய உரை உணர்த்தியதுபோல், அரசியல் தீர்வு என்ற குழப் பத் தன்மையில் தமிழீழத்தை ஒழித்து, ஈழத் தமிழர்களை இன்ன லுறுத்தும் நோக்கத்தையே கொண்டதாக இன்றுவரை நடந் துள்ள செய்கைகள் நமக்கு நீங்காப் பாடமாகப் பதிந்துள்ளது. இதனை உறுதியோடு ஓர்ந்து காணவேண்டியவர்களாக(உண்மை)த் தமிழர்கள் இன்றைய நாள் உள்ளார்கள்.

பலர் பல நேரங்களில், எந்தெந்த வகையில் உயர்ந்தோங்கி யிருந்த தமிழர்களின் பண்பாட்டு நிலை இன்றைய இழிநிலை உள்ளங்கொண்டோரின் கலப்பால், எவை தமிழரின் தொன்மை, அதனைப் பற்றற்றுக் கிடக்கும் தமிழன்-இவற்றினை அவ்வப்போது சுட்டி வந்திருக்கின்றனர். பாலலர் திரு. அ. பு. திருமாலனர் அவர்களின் ''தழைக தமிழ்நெறி'' கட்டுரை உரிமைக் குரலெழுப் பத் தக்க, பிறர் எவரும் மறுத்துக் கூற முடியாத விளக்கங்கள்!

நாகரிகத்தின் வளர்ச்சியே தமிழர்களின் பிறப்பிடம் என் றுணர்ந்ததற்குப் பின்! இன்று நாகரிகத்தின் பின்னே தமிழர்கள் சீரழிகிறுர்கள் என்பதனை நினைக்கும்போது, நாட்டில் பண் பாட்டுப் புரட்சி தோன்ற வேண்டும். அதனைப் பெறும் வழி கரடுமுரடாக இருப்பினும் அதனை வன்முறை கொண்டேனும் செழுமையுறச் செய்ய வேண்டும்.

அப்பணியில் இழப்புகள் என்பது மனத்தை உறுதிப்படுத்தி இழந்த காலச் சூழலையும், எதிர்காலச் சூழலையும் நினைத்துப் பார்த்துப் பெறப்போகும் பயன் இழப்புகளுக்குப்பின் வரும் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள். அதற்கேற்பப் பணி கொண்டாக வேண்டும். பாவலர் இளஞ்சித்திரன் அவர்களின் 'தமிழ் உந்தியார்' பாடல் உறக்கத்தை உதைத்துத் தள்ளி யிருக்கிறது!

—பாவலர் இராவணதாசன், அயனவரம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)